களத்தில்

கருணாநிதி

KAMARAJ NEWS MART
36/18 Kalava Chetty St
CHINTADRIPET. MADRAS-2.

568

கலைஞர் மு. கருணாநிதி

இளங்கோ பதிப்பகம்

மாயூரம்

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

பதிப்புரிமை.
முதற்பதிப்பு—52.

விலை ரூ. 1-0-0

அச்சிட்டது :—கே. ஜி. பிரஸ், சென்னை—1.

களம் புகுமுன்.....

கலைஞர் கருணாநிதி! இளைஞர்! இலட்சிய வீரர்! இன்பத்திராவிடத்தின் எழுச்சி முரசொலி!

வீழ்ந்த, வீணரின் சூது மொழியிலை, சுய சிந்தனையற்றுப்போன சமுதாயத்திற்குப் புத்துணர்ச்சி யூட்டி, புத்துயிர் பெற்று, புதுவாழ்வு பெற, அவரது **இனமுழக்கம்**, மாபெரும் சம்பத்து, **திராவிட சம்பத்து!**

அவரது எழுத்தும், பேச்சும் எங்கும் நிறை நாதமாக, நாடெங்கும் நிலவிவருகிறது. அவரது நாடகங்கள் நாட்டுக்கு நல்லதொரு ஆசான்; தோழன், களம்புகும் காளையர்க்குத் தாய்படும் கேடயமுமாகும்!

களம்! போர்க்களம்! உரிமைப் போர்க் களம்! **களத்தில் கருணாநிதி!**

களத்தில் கருணாநிதி! நாட்டு முக்களுக்குக் களம் புகுமுன் ஆற்றிய வீர உரை—பொற்கதை வழிவகுத்தபாதை—வீரர் கோட்டத்திற்குத் தந்த புத்துணர்ச்சி! புரட்சிப் பரணி!

சென்னையில் **கலைஞர்** கருணாநிதி 23-12-51-ல் பேசினர், ராபின்ஸன் பார்க்கில். சுவைமிக்க, தேவை

யான தேச்சு ! இதனை வெளியிட விரும்பினேன். என் அவல நிறைவேறியது. கலைஞர் கருணாநிதிக்கு என் நன்றி !

'களத்தில் கருணாநிதி' என்ற வடிவில், கல்லழுறையில் திரட்டித்தந்த எனது தோழர் மு. நமசிவாயம் அவர்கட்கு எனது நன்றி.

களம் புதுங்கள் ! கருத்தைச் சுவையுங்கள் !

மாயூரம்,
14-1-1952

வணக்கம்
P. S. இளங்கோ.

KAMARAJ NEWS MART
36/18 Kalava Chetty St
CHINTADRIPET. MADRAS-2

களத்தில் கருணாநிதி!

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! பெரியோர்களே! ஒதுங்கி நின்று ஒலிபெருக்கி மூலம் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் மாற்றுக் கட்சி நண்பர்களே! உங்கள் யாவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

இன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் இங்கே கூட்டப்பட்டிருக்கும் இக் கூட்டமானது, தேர்தலில், வரப்போகும் பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஜீவதாரப் பிரச்சினையான, 'திராவிட நாட்டுப் பிரிவினையை, திராவிட நாடு திராவிடருக்கே என்ற மூலதாரப் பிரச்சினையை உறுதிப்படுத்தி, ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு, அதனால், தேர்தலில் நம்முடைய, திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் ஆதரவை, அதிகாரபூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுள்ள, வடசென்னை வண்ணைரப்பேட்டை தொகுதிக்கு, சென்னை சட்டசபைக்குப் போட்டியிடும் தோழர் ஆல்பர்ட் ஜேசுதான் அவர்களையும் அதே போன்று ஒப்பந்த ஏட்டிலே கையெழுத்திட்டு நம் ஆதரவைப் பெற்று, வண்ணைரப் பேட்டை, பொன்னேரி தாலுக்கா, ஸ்ரீ பெரும்புதூர், திருவள்ளூர், சைதாப்பேட்டை முதலிய தொகுதிக்குப் பார்லிமெண்டுக்கு, டெல்லி மக்கள் சபைக்குப் போட்டியிடும் தோழர் ஜேம்ஸ் போண்டு அவர்களையும் ஆத

ரித்து, வரும் தேர்தலில் அவர்களுக்கே எல்லோரும் தங்கள் வாக்கை வழங்கி, இதன் மூலம் திராவிட நாடு திராவிடருக்கே என்ற ஒலி, இதய கீதம் சட்டசபை, மக்கள்சபை இரண்டிலும் முழக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே கூட்டப் பட்டிருக்கிறது.

தேர்தலில் பலப்பல கட்சிகள், சுயேச்சை யாளர்கள் போட்டியிடுகின்றனர். இதிலே குறிப்பாக இன்று ஆட்சிப் பீடத்திலே அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியும் ஒன்று.

காங்கிரஸ், நாட்டில் நான்காண்டுகளுக்கு மேலா கவே ஆட்சி செலுத்திவருகிறது. அவர்கள் மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திட, மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

எனக்கு முன்னர் பேசிய தோழர்கள் பலரும், நான்காண்டு காலத்திலே, இன்றைய ஆட்சியாளர் கள், காங்கிரஸ் சர்க்கார் செய்தவை யென்ன? சாதித்த தென்ன? மக்களுக்குச் செய்த நன்மை தான் என்ன? எவ்வளவு கொடுமைகளை, கோரக் காட்சிகளை, பசி, பட்டினி, பஞ்சம் இவைகளைக் கொட்டியுள்ளது என்பன வற்றையெல்லாம் எடுத் துக் கூறினர்.

அண்ணை, திராவிட மூன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்—அண்மையில் நடந்த மாநில மாநாட்டிலே தேர்தலைப்பற்றிய கழகத்தின்

KAMARAJ NEWS MART
36/18, Kalyva Chetty St
CHINTADRIPET. MADRAS-2.

முடிவை, நிலையை, திட்ட வட்டமாக எடுத்து விளக்கினர்.

இந்த தேர்தலைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம், இன்றைய ஆட்சியாளர்கள், இன்றைய காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிப்பீட மேறிய கால முதல் இன்றுவரை இந்த நான்கு ஆண்டுகளாக நாட்டை நலிவுறச்செய்தனர். நாட்டை எத்தனை எத்தனையோ கேடுகள் சூழ்ந்தன. அதே காங்கிரஸ் மீண்டும் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால், ஆட்சியின் பிடி மறுமுறையும் அதனிடத்திலேயே சிக்கிவிட்டால் மீண்டும் எத்தனை யெத்தனை சீரழிவுகள் சிக்கலான பிரச்சினைகள் நாட்டைச் சூழும் என்பதை விளக்கினர்.

எனவே காங்கிரஸ் தோற்கடிக்கப்படவேண்டும், மறுமுறையும் அவர்களது அலங்கோல ஆட்சியிலே அல்லல்படும் அவலநிலை கூடாது; தேவையுமில்லை, இதனைத் தடுத்தாகவேண்டும், நாடு நலம் பெற, நாட்டு மக்கள் நல்வாழ்வு நடத்த.

இந்தக் காங்கிரஸ் கடந்த காலத்திலே செய்த கொடுமைகளை நாடு நன்கு அறியும். அதைப்பற்றி பலரும் சொன்னார்கள் சொல்லியும் வருகிறார்கள். இதில் சிலர் சொல்ல மறந்ததையும், அல்லது நீங்கள் ஏடுகளிலே படிக்கத் தவறியதையும் பலரால் சொல்ல முடியாமல் விட்டுப்போனவற்றையும், நான் சொல்லுகிறேன், கேளுங்கள்.

ஐந்து ஆண்டுகட்கு முன், "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்தரம் வந்தென்று".....என்று டி. கே. பட்டம் மாள் பாட, பேபி கமலா அபிநயம்பிடித்து ஆடி ஆரம்பித்ததே ஆனந்த சுதந்திரம் அன்று முதல் இன்று வரை இந்த ஆட்சியாளர்கள் செய்தது என்ன? சாதித்ததுதான் என்ன? அடக்கு முறையை அள்ளி அள்ளி வீசினர். இதை குறிப் பாக, புள்ளி விவரங்களுடன் விளக்கிக் கூற ஆசைப் படுகிறேன்.

ஐந்தாண்டு அகிம்சா மூர்த்திகள் ஆட்சிக் காலத்திலேதான் 1982 முறை துப்பாக்கிப் பிரயோ கம் நடந்திருக்கிறது. அதுமட்டுமல்ல 3784 பேர் சுட் டுக் கொல்லப்பட்டனர் பத்தாயிரம் பேருக்குமேல் படுகாயமடைந்தனர் சுமார் ஐம்பதாயிரத்துக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டனர், காவற் கைதி களாக, அரசியல் கைதிகளாக. இத்துடன் அடங்க வில்லை. சிறையிலே அடைக்கப்பட்ட அரசியல் கைதிகளில் எண்பத்திரண்டு பேர் சிறைக்கம்பிகளுக் கிடையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவை எல்லாம் எங்கே நடந்தன? யார் இந்த ஆணவக்காரர்கள், ஐந்தாண்டுக்குள் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தி இரண்டு முறை துப்பாக்கி பிரயோகம் செய்தவர்கள்? ஹிட்லரா? அல்ல அல்ல! முசோலனியா? இல்லவே இல்லை! பின் யார்? ஜார் மன்னரா? கிடையாது. எல்லாம் அகிம்சையின் வழித்தோன்றல்கள் காந்தியாரின் பிரதம சீடர்கள் இன்றய ஆட்சிப் பீடத்திலே கொலு வீற்றிருக்கும்

காங்கிரஸார் செய்தவையே. ஒரு சில ஆண்டுகளுக்குள் ஒருமுறையல்ல இருமுறையல்ல ஓராயிரத்திற்கு மேற்பட்ட துப்பாக்கி பிரயோகங்கள், இதன் விளைவாகப் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர் காயமடைந்தனர்;மூவாயிரத்திற்குமேற்பட்ட பிணக்குவியல்கள். எங்கும் என்றும் கண்டும் கேட்டுமே இராத கோரக் காட்சி, பரிதாப நிலை; பாரளவந்த பாரத புத்திரர் தந்த பரிசு, எங்கும் பஞ்சம், பசி, பிணி, பட்டினிப் பட்டாளங்கள் என்ற நிலை, கொடுமை! கொடுமை!!

நாட்டிலே,நாடாளவந்தோர் கவனத்தைக்கவர்ந்திட எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. பாட்டாளியின் துயர். பசி! பசி! என்று கூக்குரலிடும் பட்டினிப் பட்டாளங்கள்; நூல் இன்றி அதனல் வேலையின்றி உண்ண உணவின்றி வாழ வகையற்று வதங்கி வாழ்வை வெறுத்துத்தூக்கிலே தொங்கும் ஏழை நெசவாளியின் நெஞ்சக் குமுறல், பெற்ற குழந்தைகளுக்குச் சோறிட முடியாது தவிக்கும் தாயின் துன்பச்செய்தி, பெற்ற குழந்தை குட்டி கஞ்சப் பசிக்கொடுமையால் பாழும் கிணற்றிலே தள்ளித்தானும் தற்கொலை செய்துகொள்ளும் வேதனைச் செய்திகள் சட்டசபையிலே, அரசியல் நிர்ணய சபையிலே மோதிற்று. செவி சாய்த்தனரா? இல்லை, அரசியலார், நாடாளும் காங்கிரசார்.

இன்று எந்த முகத்தை வைத்துக்கொண்டு மீண்டும் ஓட்டு வேட்டையாட வருகிறார்கள். முன்னர் மஞ்சளைக் கொண்டுவந்தனர், மஞ்சள் பெட்டியில்

ஓட்டுப்போட்டால் மந்தகாச வாழ்வு கிடைக்கும் மகிழ்ச்சி பொங்கும் என்றெல்லாம் கூறினர். ஆனல் நடந்தது, நடப்பதுதான் என்ன? மீண்டும் மாட்டை ஓட்டி வருகின்றனர், இந்த மாடுகளைச் சட்டசபைக்கு அனுப்பினல் நாடு என்னவாகும்? மாட்டுத் தொழுவமாகவே மாறிவிடும். சற்று ஆத் திரத்துடனேயே, ஏன் என்னை அறியாது உணர்ச்சி மிகுதியால், கொதித்த உள்ளத்தோடு கூறுகிறேன்,

இதைக் கூறுவது "கருணிதி"யல்ல, பசி! பசி! என்று கதறிடும் பட்டினிப் பட்டாளங்கள் கருணிதி உருவில் கேட்கின்றனர்.

பசி! பெரும்பசி ! கோரப்பசி! பசி—ஜார் மன்னனை ஆட்டிப்படைத்த பசி. பசி—பிரெஞ்சு மன்னன் லூயியைப் படாத பாடுபடுத்திய பசி சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யங்களையே சாய்த்துத் தலகுனியச் செய்தப் பசி! பசி—பாஸ்ட்டிலி சிறையைச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்தப் பசி! இந்நாடெங்கும் கோரத் தாண்டவமாடுகிறது.

நாட்டிலே பஞ்சத்தை உண்டாக்கிய இந்தப் பஞ்ச! மந்திரிகள், பஞ்சத்தால் கவலைப்படு வோரைப்பற்றிக் கவலைப்படாமல், கோரச் செய்தி கனுக்கூட செவி சாய்க்காது மந்தகாச வாழ்வு வாழ் கின்றனர். நாட்டிலே, ஆங்காங்கு பிள்ளை வியாபாரம் நடக்கின்றதே, பசிக்கொடுமையால், பஞ்சத்தால், பெற்ற மகனையே, விலை கூறி விற்றிடும், பிள்ளைக் கடைகள் வைக்கும் தாய் தந்தையர்களைக் கண்டும்

கேட்டும் "ஏன் இந்தக் கொடுமை? தடுக்கவேண்டாமா இதனை? இதற்கான சூழ்நிலையை மாற்றியமைக்க முயற்சி செய்ய வேண்டாமா?" என்றெல்லாம் ஆளவந்தார் சிந்திக்கவில்லை; சிந்திக்காதது மட்டுமல்ல, சிறு துளி கண்ணீராவது விட்டார்களா? இல்லை.

இவர்கள் தான், இந்தக் காங்கிரசார்தான், இன்று மீண்டும் ஓட்டுக் கேட்க வந்துவிட்டனர், மாட்டுப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு.

மாட்டுப் பெட்டிக்காரர்களுக்கு ஓட்டுப்போடலாமா? நமது வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டவர்களை, நம்மையெல்லாம் பசியால் பரதவிக்கவிட்ட ஆறவுன்சாருக்கு ஓட்டுப்போட்டு அதிகார பீடமேற்றி வைத்திடுதல் நல்லதா? யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய நலன்களைக் கவனிப்போர், நமது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்திடும் அறிவு ஆற்றல்கொண்டவர், மனிதாபிமானம் படைத்தோர் ஆட்சியிலே அமர்ந்தால், அரசு செலுத்தினால்தானே மக்கள் மக்களாக வாழமுடியும், வாழ வழிபிறக்கும். இதற்கு மாட்டுப்பெட்டி லாயக்கா?

மாட்டுப்பெட்டியிலே ஓட்டுப்போட்டால் என்ன?

மாட்டுப்பெட்டியிலே ஓட்டுப்போட்டால் நமக்கு நாமே வேட்டு (வெடி) வைத்துக்கொண்டவர்களாவோம். ஆம் நமது வாழ்வில், வயிற்றில் மண்ணைப் போட்டுக்கொண்டவர்களாவோம்.

இப்பொழுதே, அவர்கள் செய்யும் கொடுமைகள் தாங்க முடியவில்லை. திண்டுக்கல்லில் மக்கள் பட்டினியால் பரதவித்து, சோறின்றி, உண்ணவேது மின்றி வாடி, வதங்கிக் கத்தாழைச் சோற்றைத் தின்று வயிறு வளர்த்தனர். கோரநிலை, கொடுமையான சேதி, இத்துடனே? கத்தாழையைத் தின்று தம் பசியை, பட்டினியை, ஒட்டிய வயிற்றை நிரப்பி ஓரிரு நாள் வாழ்ந்தவரில் ஆறுபேர், ஆறு மனித உருவங்கள், ஆறு பாவத புத்திரர்கள் பரலோகம் சென்றனர். பரிதாப மரணமடைந்தனர். இதைப் பற்றி ஏதாவது செய்தனரா? இல்லை.

திருநெல்வேலியிலே பட்டினியால் வாடுவோருக்குக் கஞ்சித் தொட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் கஞ்சி குடித்திட, கொதிக்கும் கஞ்சியை, குடல் சுருண்ட கும்பியிலே ஊற்றி ஓரளவு உயிர் வாழ்ந்திட, பரிதாபம்! மிகமிகப் பரிதாபமான காட்சி! மக்கள், திருநெல்வேலியைச் சுற்றியுள்ள பத்துப் பதினைந்து மைல்களிலிருந்தெல்லாம், பசியோடு கால் கடுக்க நடந்து வந்து, தேங்கித்தவிக்கும் நிலையையாவது எண்ணிப் பார்த்ததுண்டா? மாற்று, மருந்து, தேடினரா? இல்லை!

இவற்றைக் கேட்டு, கவனித்து, நிலையைத் திருத்திட, ஆறுதல் அளித்திட, ஒரு சிறு கண்ணோட்டம், கருணைப் பார்வை, கடைக்கண் வீச்சாவது, காட்டிடவில்லை. இதற்கெல்லாம் இவர்கட்கு நேரமோ காலமோ இல்லை! ஏன்?

இதைக் கவனிப்பதைவிட, இவர்கட்கு வேறு வேறு வேலைகள் பலப்பல இருக்கின்றன. காமராஜர் எங்காவது கல்லூரி மூடுவிழா நடத்துவார். பக்தவத்சலனார் பங்களாத் திறப்புவிழாச் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருப்பார், குமாரசாமிராஜாவோ எங்காவது கும்பாபிஷேக வைபவத்திற்குத் தலைமைப் பொழிவு நடத்திக் கொண்டிருப்பார். இப்படிப்பட்ட வேலைகள், சதா சுற்றிச் சுழன்று சுழன்று வேலை செய்கின்றனர். இதையெல்லாம் மறந்து மக்கள் துயர் துடைத்திடும் பணியில், துன்பப்புயலை மாற்றிடும் காரியத்தில் இறங்கமுடியாதல்லவா?

மக்கள், பசி, பசி என்று கதறிக்கொண்டிருக்கும் நாட்களிலே தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்கள், சிறைச்சாலையிலே கைதிகள் அடைப்பு வேலைகள் முதலியன நிகழ்ந்து வருகின்றன.

சிறைச்சாலை—சிறையிலே கைதிகள்! அதுவும் அரசியல் கைதிகள், காவற் கைதிகள் பதினாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். சிறைச் சம்பவங்கள், சிறையிலே நடக்கும் சீரழிவுகள் நம்சிந்தனையிலே சந்தீ மூட்டிடும் அளவுக்கு மகாமகா கோரமும் கொடுமையும் நிறைந்தவை.

எல்வளவோ சிறைச் சம்பவங்கள் நடந்தன. அதிலே ஒன்று. திருவாங்கூர் பகுதியில் ஒருவரைக் கைதுசெய்தனர்; காவற் கைதியாக அடைத்தனர், சிறையிலே. அவரை உண்மை உரை—உண்மை உரை இன்றேல் உதை விழும் என்று உருட்டி

மிரட்டிப் பேசிப் பார்த்தனர். அதன்பின் நன்றாக அடித்தனர், அந்தக் கைதி தன் நிலை மறந்து, தள்ளாடிடும் அளவுக்கும் மேல் அடித்தனர். மேலும் அடித்தனர், சுருளச் சுருள மயங்கிக் கீழே விழும் வரையும் அடித்தனர்.

தன்னைமறந்து, அடி, உதை பட்டு அசந்து கிடந்த அந்தக் கைதிக்குத் தாகமெடுத்தது. வாய் திறந்து, நாத்தழுதழுக்க 'தண்ணீர்' என்று கேட்டான். கேட்டதுதான் தாமதம், தண்ணீரா வேண்டும், இதோ தருகிறோம் என்று மிகவும் பரிவும் பாசமும் கொண்டவர்போல் நடித்து ஓடினர். திரும்பி வந்து அவனிடம் தண்ணீர் என்று சிறு பாத்திரத்தில், சிறு நீரைத் (மூத்திரம்) தந்தனர், குடிக்க, அடியால், உதையால் அசதியாகக் கிடக்கும் காவற்கைதிக்கு.

அதைக் கண்ட அந்தக் கைதியின்மனம் என்ன பாடுபட்டிருக்கும். 'ஐயோ, நாஉலர்ந்து, நடக்கச் சக்தியற்றுக் கிடக்கும் நேரத்திலே, தாகந் தீர்ந்திடத் தண்ணீர் கேட்டால், சிறுநீர் தருகிறார்களே; அஹிம்சா மூர்த்திகளின் ஆட்சியில், காந்தீயத்தின் தத்துவப் பிள்ளைகள் என வாய்ப்பறை யடிப்போர், 'ஐயோ, அம்மா, நான் வீட்டிலே, தண்ணீர் வேண்டும் என்று கேட்டால் என் தாய், என்னைப் பெற்று வளர்த்த தாய், 'மகனே பால் வேண்டுமானாலும் தருகிறேன், சூடாகச் சாப்பிடு' என்பாளே. இன்றேல், 'தண்ணீர் ஏனப்பா, குளிரும், வெந்நீராவது குடி எனக் கொடுப்பாளே' என்றெல்லாம் எண்ணக் குமுறல்கள், இதயபாரம் தோன்றித்

தன் அன்னையை, மாதாவை நினைத்துத் தேம்பி யிருக்க மாட்டானே?

அப்படிப்பட்ட நிலையிலே, சிறுநீரைக் குடிக்கத் தந்த கோரக் காட்சியைக் கண்ட நேரத்திலே, அவன் தேம்பியழுதபோது அவன் வாயிலிருந்து 'ஐயோ அம்மா' என்ற வார்த்தைகள் உதிர்ந்தன. உள்ளக் குமுறல் வெளியே கொட்டப் பட்டது, 'அம்மா' என்ற கதறல் மூலம்.

'அம்மா' என்ற வார்த்தை வெளிவந்ததும் கூடியிருந்த அதிகாரிகள் உடனே பரிவோடு கேட் டனர். 'ஐயோ பாவம், அம்மாவாவேண்டும். பொறு, இதோ அழைத்து வருகிறோம்,' என்று ஓடி, அவன் வீடுதேடி, அவன் மாதாவை, உடனே கூட்டி வந்தனர்.

அவன் முன் அவன் அன்னை நிறுத்தப் பட்டாள். தேம்பியழும் தனயன் முன்னே தாய் நிறுத்தப்பட்டாள். அவனைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய், அவனுக்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்ததாய், கண்ணே மணியே கண்வளராய், என்று தொட்டிலிலே இட்டுச் சீராட்டிய தாய் அவன் முன்னே நிறுத்தப்பட்டாள். மகன் பெரியவனாகிப் படித்துப் பட்டம் பலபெற்று, மகனுக்குத் திருமணம் செய்வித்து மகனும் மருமகளும் மணவறைக்குச் செல்வதைக் கண்டு களித்துப் பூரிப்படைய விருந்த அவனது தாய், அவனைப் பெற்றதாய் அவன் முன்னே நின்றாள், நிறுத்தப்பட்டாள், நிர்வாண மாக; முழு நிர்வாணமாக.

மகன்—மகனுக்கு நேராக, நேருக்கு நேராக அவனது மாதா நிற்கிறாள், நிர்வாணமாக.

பிள்ளை—பிள்ளைக்கு எதிரே அவனைப் பெற்ற அன்னை; பிறந்த கோலத்திலே!

மகன்—மகன் முன்னே சேலையற்ற, சேலை யவிழ்த்து விடப்பட்ட மாதா—முழு நிர்வாணக் கோலத்தில்! அவள் எதிரே அவளின்மகன்—மாணிக் கம்—தனயன்—அவள் பெற்ற தங்கக் கட்டி தள் ளாடி நிற்கிறது—தான் பெற்ற மகன், தன் முன்னே —வேஷ்டியில்லாத மகனுக பிறந்த பிள்ளையைப் போல முழு நிர்வாணமாக நிறுத்தப் பட்டிருக் கிறான்.

கோரம்—கொடுமை—மிகக் கொடுமை—மகன் முன்னே மாதா, மானத்தைக் காக்கும்சேலை யின்றி, அதுவும் மகனும் வேஷ்டியின்றி—தாய்—தனயன்—மாதா—மகன்—அன்னை—அரும் புதல்வன்—இரு வரும் நேருக்கு நேர்—எதிர் எதிராக நின்றனர், நிறுத்தப்பட்டனர் நிர்வாணக் கோலத்தில்—சுவை யான காட்சியென்று ரசித்தனர் போலும்—அவர் களின் சுவை அத்துடன் நிற்கவில்லை.

வெட்கம்—வேதனை—மிகமிக வேதனை—வெளி யில் சொல்லவே வெட்கக் கேடான காரியம் நடந்தது, நடத்தப் பட்டது.

நிர்வாண மகனையும், நிர்வாணத் தாயையும்— இணைத்தனர்—பலாத்காரமாகப் புணர்ச்சியிலீடு

படுத்தினர்—கேவலம். நெஞ்சிலே நினைப்பதற்கே கேவலம்.

காந்தியார் வாழ்ந்த நாட்டிலே, காந்தீயம், அகிம்சையின் பேரால் ஆண்டிடும் ஆளவந்தார் செய்திடும் செயலா? கற்புக் கரசிகள் வாழ்ந்த நாட்டில் கண்மூடித்தனமான ஆட்சியிலே, மகன் தாயை பாலத்காரமாகப் புணரச் செய்யும் கொடுமை, கோரம், பாதகச் செயல், படுமோசச் செயல், நினைத்தும் பார்த்திட முடியாத நீசச் செயல் நடப்பது எந்த நீதிக்குப் பொருந்தும். பாதகம் செய்து விட்டுப் பவனி வந்து ஓட்டுக்கேட்பது முறையா?

அந்த நாளிலே, 'தாலியறுத்தான் இராமசாமி' என்றுகட்டுக் கதைப் புளுகுகளை அளந்து கொட்டிக் காங்கிரசார் தேர்தல் கீதம் பாடினர்.

இன்று நடைமுறையில், நாடாள வந்தவரான பின்னர் அவர்கள் ஆட்சியிலே இந்த அலங்கோலம், ஆபாசம், அறுவறுக்கத் தக்க மகா மட்டரகச் செயல் நடப்பது, அதைக் கவனியாதிருப்பது நன்று?

தாயையும் மகனையும் பலாத்காரமாகப் புணரச் செய்து அரசியல் கைதிகளைச் சிறையிலே வேட்டை யாடிவிட்டு இன்று ஓட்டு வேட்டைக்குப் புறப்பட் டுள்ளனர்.

ஓட்டுக் கிடைக்குமா? மறக்கமுடியுமா இவர் களின் நாடாளும் பண்புகளை? மகனையும் தாயை

யும் - இணைத்துக் கொண்டிருக்கும் சத் (!) பணி ஒருபுறம், மற்றொருபுறம் பட்டினிக் காடு, போலீஸ் தர்பார் ஒருபுறம்-புலம்பல் மற்றோர் புறம். அடக்குமுறை தர்பார்ஒரு புறம்-பட்டினிச் சாவுகள்-பசியால் பெற்ற பிள்ளையை மாதா விலைகூறி, விற்று வயிறு வளர்க்கிறாள்—காந்திய வழிவந்தோரின் ஆட்சியிலே!

திருக்கோயிலூரில் ஒருவனுக்கு வாழவழியில்லை, உண்ணச் சோறும் கிடைக்கவில்லை. சிலநாட்கள் எள்ளுக்காய், சில நாட்கள் பிண்ணைக்கு, வேறு சில நாட்கள் கத்தாழைச் சோறு இப்படித்தின்று பார்த்தான். பசி, வயிற்றுப் பசி தீரவில்லை. புளியங் கொட்டைகளையும் விடவில்லை—தின்று தீர்த்தான். தீர்ந்தபாடில்லை அவன் வயிற்றுத் தீ, பசி.

ஒருநாள் பசி தாளாது அலைந்தான். ஏதும் கிடைக்கவில்லை. திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது. ஓடினன்—ஓடினன் வேக வேகமாக ஓடினன் சுடுகாட்டிற்கு, பிணங்களை வேக வைக்கும் சுடுகாட்டிற்கு ஓடினன், பிணமாக அல்ல, ஆலை நடைப் பிணமாக.

சுடுகாட்டிலே ஒரு பாலகனின் பிணம் தீச்சுழலில் வெந்து கொண்டிருந்தது. ஓடி அந்தப் பிணத்தின் மேலே கொழுந்து விட்டு எரிந்த நெருப்பைத் தள்ளினன், அதன் கீழ் அடுக்கப்பட்டிருந்த வரட்டிகளை வாரிவாரி வீசியெறிந்தான்—பிணம் பக்குவமாக வெந்திருந்தது—வெந்த பிணத்தை—பக்குவ

மாக வெந்த பிணத்தின் தொடைக் கரியை வாயிலே வைத்துத் தின்றான், தின்று கொண்டிருந்தான் —சுவைத்துச் சுவைத்துத் தின்றான். கோரப்பசி தீர, கோரப் பிணத்தின் சதையைச் சுவைத்துத் தின்றான். பிணத்தை நடைப்பிணம் நல் விருந்தாக் கிக் கொண்டிருந்தது.

பொதுமக்கள் சிலர் இக்கோரத்தைக் கண்டு கூக்குரலிட்டுப் போலீஸிடம் புகார் செய்தனர். போலீஸ் பட்டாளம் விரைந்தோடி, சுடுகாடு சென்று பிணத்தைத் தின்றுகொண்டிருந்தவனைக் கைது செய்தனர்.

கைதியைக் கேள்விமேல் கேள்வி கேட்டனர். 'என்னப்பா, பிணத்தைப் புசிக்க ஆரம்பித்து விட்டாய்' என்று. கைதியின் பதிலென்ன? 'ஐயோ, நான் பசியால் வாடி வதங்கினேன்—உண்ணவோ சோறில்லை. கிடைத்ததையெல்லாம் தின்றேன்— எள்ளுச் செடிகள் என் பசியைப் போக்கவில்லை, பிண்ணாக்கு, புளியங்கொட்டை ஏதும் எனக்கு உதவ வில்லை. பசி தாங்க முடியவில்லை—பிணத்தை —பிணத்தின் சதைக் கரியையாவது தின்று பசியா றினைத்தேன். சென்றேன் சுடுகாடு. தின்றேன் பிணத்தை—பசி போக்கிட வேறு வழி—வகை தெரியவில்லை—கிடைக்கவில்லை என்று கதறினான்.

இதைக்கேட்ட ஆளவந்தார்கள், அழுதனரா? 'ஐயோ பாவம்' என்றுவது கூறினரா? "இதோ அன்னம், பசியாறப்புசி என்று தந்தனரா? ஏதும்

இல்லை—பிணத்தைத் தின்னும் அளவுக்குப் பசி, பஞ்சம், பட்டினிப்பட்டாளம் வளர்ந்து விட்டது, நாட்டில். ஆட்சியின் கோரம் இது, என்ற சேதி, உலகில் தெரிந்தால் என்னகும், அண்டை அயல் நாடுகள் என்ன நினைக்கும் என்ற எண்ணத்தால் அவனைப் பற்றிய புகாரில் அவனுக்குப் பைத்தியம்'' எனவேதான் தெளிவற்ற சூழ் நிலையில் பிணத்தை யும் தின்றான் பைத்தியக்காரன் என்றனர். அவனே "இல்லை நான் பைத்தியக்காரன் இல்லை, பசிகாரன், பசிகாரன்'' என்று கதறினான்—என்ன பலன்? அவன் பைத்தியக்காரன், பைத்தியக் காரனேதான் உலகில்.

ஒரு பக்கத்திலே தாகத்திற்குச் சிறு நீர் தரும் கோரம், அம்மா என்று அலறினால் அன்னையுடன் பலாத்காரப் புணர்ச்சி செய்விக்கும் பேயாட்டம். மற்றொருபுறம் பட்டினிப் பட்டாளங்கள், புளியங் கொட்டை பிண்ணாக்கு, கற்றாழை, ஏன் பிணங் களையே பிடுங்கித் தின்னும் நடைப்பிணங்களாய் நாட்டு மக்கள் படும் அவதி. எதைப்பற்றியும் எண்ண நேரமோ, நெஞ்சமோ இல்லை, கிடையாது. மாறுக இடையே கேலிப்பேச்சுகள், கிண்டல் மொழிகள் ஏராளமாக அள்ளி வீசுவர்.

அவர்களுக்குள்ள பல்வேறு வெளி விவகாரங் களுக்கிடையே ஒரு பொழுது போக்காக, வேடிக்கை விளையாட்டாக, கேளிக்கைக் காட்சியாக உணவுப் பஞ்சத்தைக் கவனிப்பர், கவனிக்கின்றனர்.

நாட்டிலே உணவுப் பஞ்சம், பசி, பட்டினிப் பட்டாளங்கள் பெருகிவிட்டன. உணவுப் பொருள் போதவில்லை. சர்க்காரை நோக்கி மக்கள் கேட்கின் றனர். 'உணவு கொடு, உணவு கொடு' என்று இதுபற்றிப் பாராளும் மந்திரிகள் கவனிக்கும் முறை, மாதிரி, மிகமிக மோசம், கேலியும், கிண்டலுமாகக் காண்கிறது. மத்ய உணவு மந்திரி மூன்ஷியின் பேச்சு இது :

பசியா? ஏன்! உணவு கிடைக்கவில்லை ஏன் உணவு கிடைக்கவில்லை? உணவு உற்பத்தி குறைந்து விட்டது? ஏன் உணவு உற்பத்தி குறைந்து விட்டது? வயல்கள் வளமாக இல்லாத காரணத்தால்! ஏன் வயல்கள் வளமாக இல்லை? வயல்களிலே நீர் வரண்டு விட்டது. ஏன் நீர் வரண் டது? மழையில்லை ஏன் மழையில்லை? வானிலே மேகங்கள் இல்லை? ஏன் மேகங்கள் இல்லை—பருவக் காற்று தவறி விட்டது. என்று இப்படிப் பேசிப் பேசி இதற்கெல்லாம் காரணம் நாட்டிலே காடுகள், மரங்கள் அதிகமாக இல்லாதகாரணந்தான்.காடுகள், மரங்கள் இருந்தால் அவை பூமியிலுள்ள நீரை உறிஞ்சி, தம் இலை தழை வழியாக நீராவியைக் காற்றிலே கலந்து; வானத்தில் மேகங்களை அதிகரிக் கும்—மேகங்கள் அதிகரித்தால் மழைபொழியும், மழை பொழிந்தால் வயல்களிலே நீர்புரளும்; வயல் களிலே நீர் புரண்டால் வயல் வளமடையும்; வயல் வளமடைந்தால் விளைச்சல் அதிகமாகும்; விளைச்சல் அதிகமானால் உற்பத்தி பெருகும்; உற்பத்தி பெரு

கிணல் உணவு உபரியாகி உணவுப் பஞ்சமே போய் விடும்.

எனவே எல்லோரும் பெருக்குங்கள், மரம் நடுவதைப் பெருக்குங்கள், நாடெங்கும் மரம் நடுங்கள்; மரம் நடும் விழாக்களை மகத்தான முறையிலே கொண்டாடுங்கள்; திருவிழாபோல் செய்யுங்கள், என்று பிருந்தாவனத்திட்டம் தந்தார். உணவில்லாது பசியால் பட்டினி கிடக்கும் மக்களுக்கு வனமகோற்சவம், மரம் நடு விழாக்கள், நாடெங்கும் நடத்தப்பட்டது, நடத்தப்பட்டு வருகிறது. வெகு ஆடம்பரமாக, மிகமிக விமரிசையாக அமர்க்களப் படுத்தப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுச் செய்யப்படு கிறது.

இந்த மரம் நடும் விழா! எதற்கு? மரம் நட்டு அது செடியாகி, வாடாது வதங்காமல் பெரியமரமாகி, மரமானது பூமியிலுள்ள நீரை உறிஞ்சி, இலைகளின் மூலம் நீராவியைக் காற்றிலே கலந்து, காற்றைக் குளிர்ச்சியாக்கி, மேகங்களை இழுத்து, மழை பெய்விக்க! விசித்திரமான ஏற்பாடு! உடனடிப் பிரச்சினையான பட்டினியைப் போக்க ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடு!

மரம் நடுவதற்கு அந்தத் தொழில், மரம் நடும் பழக்கமோ, வழக்கமோ அற்ற அதிகாரிகள் எல்லாம் செல்கின்றனர் ஊரை விட்டு ஊர். அது மட்டுமா? மரம் நடுவிழாவிற்காகச் செலவிடப்படும் தொகையோ ஏராளம், பலப்பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள். அத்தனையும் மக்கள் வரிப்பணந்தான்.

மரங்களை நடும் ஒரு சிறு, சாதாரண சம்பவத்தை யொட்டிச் செலவிடப் பட்டு வருகிறது.

மரம் நடுகிறார்களே அதாவது பலன் தருகிறதா? முறையாகவாவது செய்கிறார்களா? என்றால் கிடையாது.

நான் இப்போது, இந்த மேடையில், திராவிட முன்னேற்றக் கழக உறுதி மொழிச் சீட்டில் கையொப்ப மிட்டு திராவிட நாட்டுப் பிரச்சினையை ஒப்பித் தேர்தலுக்கு நிற்கும் தோழர்களை ஆதரித்துப் பேசுகிறேன். எல்லோரும் அவர்களுக்கே உங்கள் வாக்கை அளிக்கவேண்டுமென்று கேட்கிறேன். இதன்பின் ஒரு சில மாதங்கட்குப் பின் நான் இதே இடத்தில் மறு முறை பேசுகிறேன். அப்போது நான் குறிப்பிடுவதிலே, அதாவது நான் முன்பே இதே இடத்தில் பேசியிருக்கிறேன், அங்கேயே தான் மறுபடியும் பேசுகிறேன். அப்போது சொன்னபடி, கேட்டுக்கொண்டபடி வாக்காளர்கள் நடந்தனர். நாட்டுப் பிரிவினையை ஆதரித்தனர், என்று குறிப்பிட்டுப் பேசுவதிலே அர்த்தமுண்டு பெருமையுண்டு, மகிழ்ச்சியுமுண்டு. ஆனால் வன மகோற்சவத்தில் ஒரு விசித்திரம் பாருங்கள்.

உதாரணமாக வனமகோற்சவம் பெருமுயற்சியோடு கொண்டாடப்படுகிறது இந்த இடத்திலே இவ்வருடம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ சில செடிகளை இங்கே விழாவின் போது நடுகிறார்கள். அடுத்த ஆண்டும் இதே இடத்தில் வனமகோற்சவம் நடைபெறுகிறது. அப்போது கூறுகிறார்கள்,

இந்த இடத்தில்தான் சென்ற ஆண்டும் மரம் நடும் மாபெரும் விழா நடைபெற்றது. இந்த ஆண்டும் இதே இட்த்தில் இந்த விழா நடைபெறுவதைக் கண்டு எம் உள்ளம் பூரிக்கிறது, களிப்பு பொங்குகிறது என்று. எப்படி? பிருந்தாவனத் திட்டத்தின் வெற்றி முரசொலி! பயன்?

இந்த ஆண்டு நட்ட செடிகள் பட்டோ அல்லது ஆடுமாடுகள் மேய்ந்தோ போயின வீணை க. அதனல் அடுத்த ஆண்டும் இந்த இடத்திலே மறுமுறையும் மரம் நடும் விழா, மக்கள் வரிப்பணத்திலே, நடப்பது கண்டு களிப்பு? பூரிப்பு!

இந்த முறையிலே தான் மரம் நடும் விழாக்கள், வனமகோற்சவங்கள் நடைபெறுகின்றன. வெட்டிச் செலவுகள், வீண் பிரயாணங்கள், தேவையற்ற ஆடம்பரங்கள், விளம்பர ஆர்பாட்டங்கள், காலத்தை வீணைக்கும் கேளிக்கைக் கோலாகலங்கள், இந்த விழாவை முன்னிட்டு நடப்பதால் பணம் பாழாகிறது, மக்களின் வரிப்பணம்.

ஒரு சர்வசாதாரணச் சம்பவமான ஒரு சிறு செடியை நடுவதற்கு உயர்த்த அதிகாரிகள் ஊரை விட்டு ஊர் போவானேன். உபயோகமற்ற வகையில் ஊராரி பணத்தை ஊதாரித்தனமாகப் பாழாக்குவானேன். ஊரெங்கும் உள்ள விவசாய இலாகாவினரிடம், விபரம் தெரிந்த, விவசாயத்தை வளப்படுத்துவதற்கே இருக்கும் இலாக்காவிலுல் இந்த மரம் நடும் வேலையை சாதாரணமாக நடத்தலாமே? வெட்டிச் செலவுகள், வீண் விளம்பரச் செலவுகள்,

நாட்டுக்குப் பயன் தரும் வகையில் உபயோகப் படுமே!

இதையெல்லாம் தூக்கியெறியும் வகையில் கல்கத்தாவில் ஒரு பகுதியில் ஒரு வனமகோற்சவம் நடைபெற்றிருக்கிறது. அதன் விவரம் மிக மிக விசித்திரமானது!

கல்கத்தாவின் ஒரு பகுதியில் மரம் நடும் விழா, வனமகோற்சவம், வெகு ஆடம்பரமான ஆர்ப்பாட்ட அமர்க்களங்களோடு விளம்பரப்படுத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்களைக் கூட்டிவைத்துக் கொண்டு சர்க்காரின் பெரிய உயர்தர உத்தியோகஸ்தர் முன்னிலையில், மாபெரும் தலைவரால் மரம் நடுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

மரம் நடுவதற்கு ஒரு திறந்த வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்கள் கூடினர். மரம் நடும் இடம் ஒரு பக்கத்தில் இருந்தது. அந்த மைதானத்தில், மைதானத்தைச் சுற்றி வேலிபோன்று ஏற்கனவே பல்லாண்டுகளாக, வளர்ந்து ஓங்கியிருந்த மரங்கள் இருந்தன. இந்த மரங்கள், கூடியிருந்த மக்களுக்கும், மரம் நடும் இடத்திற்கும் இடையே இருந்தன, மக்கள் மரம் நடும் மாபெரும் விழாவை, குறிப்பாக மரம் நடும் காட்சியைக் கண்ணுரக்காணத் தடையாக இருந்தன.

இந்தக் காரணத்தால், ஒருசெடி நடப்படுவதை மக்கள் காண, வன உற்பத்தியை, மரங்களைப் பெருக்குவற்கான விழாவிலே அதற்

காகவே நடப்படும் செடியை, வருங்கால மரத் தைதக்காணு, வளர்ந்தோங்கியுள்ள மரங்கள், காணுத படி தடைசெய்த ஒரே காரணத்தால், அவை வெட்டி வீழ்த்தப் பட்டு விட்டன, வனமகோற்சவம் கொண்டாடும் திருக்கூட்டத்தாரல்! என்ன விபரீத புத்தி? விசித்திரக் கொள்கை, மூரண் பாடான மூடக்கொள்கை! மரத்தை உற்பத்திசெய்யப் போய் உள்ள மரங்களைச் சாய்த்திடும் மந்த மதியினரிடம் மக்கள் சிக்கிச் சீரழியும் நிலையை நாம் மறந்திட முடியுமா?

இத்தகைய மட்டரகமான மகா, மகா கீழ்த்தர மான கொள்கையுடையோரை, எந்தக் காரணத் திற்காக விழாவோ, எந்த மரங்களை உற்பத்தி செய்து, உணவைப் பெருக்கப் போவதகப் பறை சாற்றி வருகிறார்களோ, அதே மரங்களை, மரம் நடும் காட்சியை காண்பதற்குத் தடையாக, மறைப்பாக இருக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக கொண்டுள்ள கொள்கைக்கே புறம்பான, புறம் பானதுமட்டுமல்ல கொள்கைக்கே, வனமகோற்சவக் கொள்கைக்கே நேர்மாறான முறையில், மர உற்பத் திக்குமாறுக மரஒழிப்பு மகோற்சவம் கொண்டாடி நும், பண்பினை வேறெங்காவது காணமுடியுமா? வெட்கக் கேடு. என்ன துணிவோடு, மக்கள் பணம் ப்ாழாக்கப்படுகிறது பாருங்கள்.

இத்தகைய துர்பாக்கிய நிலையிலே இந்நாடு போய்க்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் சர்க்கார் ஆட்சியிலே மூன்ை சிறிதும் இல்லாத மூடர்களைப்

போலல்லவா, ஆட்சி நடக்கிறது. அந்தோ, பரிதாபம்!

மூளையற்றவர், நாம் கூறும் வாசகமல்ல, காங்கிரசை ஆதரித்திடும், ஒரு ஆங்கில ஏடே ஒரு கற்பனைக் கதை மூலம் இதனைக் கேலி செய்திடுகிறது, "மூளை முழுவதும் காலி, காங்கிரஸ் மந்திரி சபைக்கு" என்ற விதத்திலே அமைந்திருக்கிறது, அந்தக் கதை.

ஒரு டாக்டர்; மூளை வியாதியைக் குணப்படுத்துவதிலே திறனுடையவர் என்று பெயர் பெற்றவர். அவர் மூளைக் கோளாறு முதலிய வியாதியஸ்தர்களின் தலையை உடைத்து மூளையை எடுத்துப் பரிசோதித்து, கோளாறுகளைப் போக்கி, மீண்டும் மூளையைத் தலையில் வைத்துவிடுவார். இந்த முறைச் சிகிச்சையிலே அவர் மிகவும் அனுபவம் பெற்ற திறமைசாலி.

இப்படிப்பட்ட டாக்டரிடம் ஒருநாள் ஒருவன் ஓட்டமும் நடையுமாக வந்து, அவசர, அவசரமாகத் தன்னுடைய மூளையைச் சீக்கிரம் சோதித்துச் சிகிச்சை செய்து தருமாறு கேட்டான். அவர் அவனது தலையைப் பிளந்து மூளையைத் தனியே எடுத்து அதனைப் பரிசோதித்தார். பரிசோதனை முடிந்து ஒரு சில சிகிச்சைகள் செய்து முடித்த பின்னர், திரும்பவும் மூளையை அந்த மூள வியாதிக்காரரின் தலையில் வைத்துப் பொருத்தத் திரும்பினர்!

என்ன ஆச்சரியம், அந்த நபரைக்காணோம். மூளையை விட்டு விட்டு, அடியோடு அங்கேயே விட்டு

விட்டு, மூளையின்றி, எங்கோ சென்று விட்டான். டாக்டர் பாடு மிகவும்திண்டாட்ட மாகிவிட்டது.

எங்கோ அவசரமாகப் போயிருக்கிறான் போலி ருக்கிறது. மீண்டும் உடனே வருவான் மூளையைப் பெற என்று காத்திருந்தார், ஆளக்காணேம், திரும் பவேயில்லை.

மூளையற்ற மனிதன் எங்கு போய்த் தொலைந் தான். என்னென்ன தொல்லைக்குட்படுகிறானே, என்றெல்லாம் எண்ணியிருப்பார், ஏங்கியுமிருப்பார் அந்த டாக்டர்.

மூளைக்கோளாறைத் தீர்த்துக்கொள்ள வந்த வன், போய்விட்டான் மூளை முழுவதையும் டாக்ட ரிடம். விட்டுவிட்டு. என்ன செய்வது ?

டாக்டர், அந்த மூளையை மிகவும், பாதுகாப்பு டன், இரச ஜாடியிலிட்டுப் பத்திரப்படுத்தி வைத்தார்.

காட்கள் பல உருண்டோடின. அந்த மனிதன் மீண்டும் வரவில்லை.

வாரங்கள் வந்து வந்து போயின.வந்தபாடில்லை, மூளையில்லாத, மூளையை விட்டுச் சென்ற அந்த நோயாளி.

மாதங்கள் பல மறைந்தன- மூளைக்கோளாறு தீர்த்திட வந்து போனவரைப் பற்றிய சேதியே இல்லை.

டாக்டர் அந்த மூளையைப் பாதுகாப்பாகவே வைத்திருந்தார். என்றுவது ஒருநாள் திடீரென்று அந்த 'மூளைக்கோளாறு' தன் மூன் தோன்றி தனது மூளையைத் திருப்பக் கேட்டால், என்செய்வது?

நாட்கள் நகர்ந்தன, வாரங்கள், மாதங்கள் மறைந்தன. ஆண்டும் ஒன்று முடிந்து விட்டது. வியாதியஸ்தனைப் பற்றிய விபரமே காணேம்.

ஆண்டுகள், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று உருண்டோடி விட்டன.

நான்காண்டுகள் முடிந்து விட்டு, ஐந்தாவது ஆண்டும் ஆரம்பமாகி விட்டது.

இன்னும் 'மூளை' பத்திரமாகத்தான் இருக்கிறது. 'மூளைக்குரிய மனிதனைத்தான் காணேம்.

மூளையின்றி, அறிவுக்கு, தான் ஆற்றும் செயல், பேசும் பேச்சு, உணர்ச்சிகள் அத்தனைக்கும் உரியதான மூளையை, அறிவை, ஆராய்ச்சியின் இருப்பிடத்தை, மனிதனை மிருகத்தினின்றும் பிரித்திடும் பகுத்தறிவை, பத்திரமாக வேறிடத்திலே விட்டு, அந்த மூளைக்கோளாறுடைய மனிதன் என்னதான் செய்வான், செய்யமுடியும். என்றெல்லாம் அந்த டாக்டர் யோசித்தார்.

மூளையற்றவன்; அதிலும் ஏற்கனவே மூளைக் கோளாறு என்று தெரிந்து அதற்காகச் சிகிச்சை செய்துகொள்ள வந்தவன், மூளையையே விட்டு விட்டு

வெளியே நடமாடினால், அவனால் எதைச் செய்ய முடியும், பேசமுடியும், எந்தத் தொழில்தான் செய்திட முடியும், யார்தான் வேலைதருவர், தந்தாலும் எப்படி அதனை நிர்வகிக்க முடியும், மூளையற்ற மனிதனால்?

ஐந்தாவது ஆண்டும் ஓடிக்கொண்டே இருந் தது, நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்றபடி.

மூளைடாக்டர், ஜாடியிலிருந்த மூளையைப்பற்றிய எண்ணத்தைக் கூட விட்டிருந்தாலும் விட்டிருப்பார்.

ஒரு நாள், திடீரென்று, டாக்டரிடம் ஒரு மனி தன் ஓடிவந்தான்.

அவனைக் கண்டதும் டாக்டர் அப்படியே ஆச் சரியப் பட்டு நின்று விட்டார்.

யார் அந்த நபர், டாக்டரைத் திக்கு முக்காடச் செய்தவன்? திக்பிரமையடையச் செய்தவன்? யாருமில்லை. மூளைக்கோளாறு என்று வந்து, மூளையைச் சரிப்படுத்திக் கொண்டு வருவதற்குள், மூளையை விட்டுவிட்டுச் சென்ற, மனிதன்தான்.

ஆம். அதே நபர்தான் ஏறக்குறைய ஐந்தாண்டு காலமாக மூளையே இன்றி இருந்த மனிதன்தான்?

அவன் டாக்டரிடம் வந்து, தான் விட்டுச் சென்ற மூளையைத் திரும்பத் தன் தலையில் பொருத்தி வைக்கும்படி கேட்டானும்.

டாக்டர், அவனை ஆச்சர்யத்துடன், "ஏனப்பா, மூளையை விட்டு விட்டு, இத்தனை ஆண்டுகளாக, ஏறக்

குறைய ஐந்து வருடங்களாக, எங்கே போயிருந்தாய், எப்படி நடமாடினாய்? என்ன வேலை செய்தாய்? என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டார்.

'நானா? அவசரமாக ஒரு முக்கிய வேலைக்குச் சென்று மனுப்போட்டேன். வேலையும் கிடைத்தது; விட்டு வரமனமின்றி ஒட்டிக்கொண்டிருந்தேன். ஓய்ச்சல் ஒழிவேயில்லை. அவ்வளவு வேலை. வேலைத் தொந்தரவுகளுக்கிடையே இந்த 'மூளை' விவகாரம் அடியோடு மறந்து விட்டது' என்றான்.

என்ன வேலையப்பா அது? என்று டாக்டர் கேட்டார்.

'காங்கிரஸ் மந்திரி சபையிலே ஒரு மந்திரி வேலை பார்த்து வந்தேன்' என்று பதில் வந்தது.

எப்படி கற்பனைக் கதையின் அமைப்பு, அர்த்தம் எல்லாம்? அதுவும் காங்கிரஸ் ஏட்டில்?

ஏற்கனவே மூளைக்கோளாரான மனிதன். புத்தி சரியில்லாதவன். புத்தியை, அறிவை, பகுத்தறியும் திறனை இழந்தவன். காரியமாற்றத் தகுதியற்றவன்.

மூளை, கோளாறு அடைந்து விட்டது; கெட்டு விட்டது; பழுதாகி விட்டது; அதனைச் சரிப்படுத்திட; சீர் படுத்திக்கொள்ள வேண்டி, மூளை டாக்டரிடம் வந்தான்.

மூளையைச் சரிசெய்திடுவதில் வல்ல டாக்டர் மூளையைத் தலையிலிருந்து தனியே பிரித்து எடுத்துப்

பரிசோத்னைக்குக் கொண்டு போனர். அவர் பரிசோதித்துத் திரும்புவதற்குள் அந்த நோயாளியைக் காணவில்லை.

நோயாளி காணமற்போனது மட்டுமல்ல ஆச்சரியம். மூளையைத் தனியே, தலையிலிருந்து மூளையே எடுக்கப்பட்டுவிட்ட நேரத்தில் ஆளைக்காணேம். ஒரு நாளல்ல இருநாளல்ல, ஒரு மாதமல்ல, இருமாதங்களல்ல, ஒரு ஆண்டல்ல, இரு ஆண்டுகளல்ல, நான் காண்டுகட்கும் மேலாகவே, மூளை, அந்த மனிதனின் தலையில் இல்லாமலே இருந்திருக்கிறது.

மூளையை விட்டுவிட்டு, மூளையில்லாது இருந்த அந்த மனிதன் நான்கு ஆண்டுகளுக்கு மேலும் கழிந்த பின்னர், திரும்புகிறான், மூளையைத் தேடி.

இடையே இருந்த காலத்தில் அவன் வாழாதிருக்கவில்லை, வகைகெட்டு மில்லை, வேலையின்றித் திண்டாடிடவில்லை, பெற்றவேலையையும் தொடர்ந்து நான்காண்டுகளுக்கும் மேலாகவே தொடர்ந்திருக்கிறான்.

மூளைக்கு வேலையில்லாத வேலை; முட்டாள்தனமான வேலை, புத்தி, அறிவு, அலசிப்பார்க்கும் தனமை, ஆராய்ச்சித்திறன், திட்டமிடும் வன்மை, தேவைப்படவில்லை, அவனது வேலைக்கு, 'மூளை'யை மறந்து, மூளையே இல்லாத மண்டையாக, மூளையற்ற வனாகவே நான்காண்டுகளுக்குமேல் வேலைபார்த்தானும்.

CHINTADRIPET MADRAS-2.

என்னவேலே! சாதாரணக் கூலியா? அல்ல! மாட்டுவண்டி யோட்டினனை? அதுவும் இல்லே. பீச்சை யெடுத்தானை? குமாஸ்தா உத்தியோகமா? இல்லவே இல்லே. பின் என்ன வேலே?

அவன் 'மூளையில்லா' திருந்த இடைக்காலத்தில் பார்த்தது, மந்திரி வேலை; நாடாண்டான். மக்களை ஆளும் மந்திரிவேலை பார்த்தான்!

மந்திரி வேலை! மூளையில்லாத தலையனுக்கு மந்திரி வேலை! அறிவு இல்லாத, இருக்கமுடியாத நபருக்கு நாடாளும் மந்திரிவேலை! சொரணையே இல்லாத, இருக்கவே முடியாதவனுக்கு மந்திரிவேலை!

வேடிக்கையாக இருக்கிறதே! இந்த வேடிக்கை மந்திரிக்கு எந்த நாட்டிலே மந்திரிவேலை கிடைத்தது? எந்த மந்திரி சபையிலே இவருக்கு மந்திரி பதவி கிட்டியது! கிடைத்தது?

அவரே, பதில் கூறுகிறார்? கேளுங்கள்.

'என்னிடம் மூளையில்லாத நேரமாகிய, அந்த நாளில், நான் காங்கிரஸ் மந்திரி சபையிலே, மந்திரி வேலை பார்த்தேன்!'

என்ன? காங்கிரஸ் மந்திரிசபையிலா? காந்தீயத்தின், சத்தியத்தின், வழித்தோன்றல்களின் மந்திரி சபையிலா?

ஆம்! காங்கிரஸ் மந்திரி சபையில்தான்; 'மூளையைத் தனியே எடுத்துத் திராவகத்தில் போட்டுப்

பத்திரப்படுத்தி விட்டு, ஐந்தாண்டுக்காலம் மந்திரி வேலை' பார்த்தான்.

'மூளையில்லாத மந்திரிகளா? அவர்களா நாட்டை யாளுவது? அதுவும் காங்கிரஸ் மந்திரிசபையில். என்ன கெடுமதி உனக்கு? ஏன் சொல்லமாட்டாய்' என்று கோபாவேசத்தோடு உறுமிடலாம் என்னைப் பார்த்து.

இது, 'மூளையற்றவர்கட்கு, இடம் தரும் மந்திரி சபை, மூளையே தேவைப்படாத மந்திரிகள், மூளையே இல்லாத முறையில் ஆட்சி நடத்தும் மந்திரிகள்,' என்றெல்லாம் பொருள் படும்படி, கேலி செய்வது, செய்திடுவது நானல்ல, நண்பனே? உங்கள் ஏடுகள் தான்!

மூளையற்றவர் என்றது ஒரு ஆங்கில ஏடு, கற் பனைக் கதைமூலம், காங்கிரஸ் மந்திரி சபையை.

இதைவிட ஒருபடி அதிகமாகவே செல்கிறது, இன்னொரு தமிழ் ஏடு.

"சொரணை கெட்ட 'எம். எல். ஏ'க்கள்! 'சோம் பேறி மந்திரிகள்'," என்றெல்லாங்கூடத் தூற்றி யுள்ளது.

இது எங்கள் வாசகமல்ல! அறிஞர் அண்ணா வின் பேச்சுமல்ல, எழுத்து மல்ல!

காங்கிரஸ் ஏடான, 'காண்டீபம்' தரும் நற்சாட் சிப்பத்திரம் 'சொரணை கெட்ட 'எம். எல். ஏ'க்கள், சோம்பேறி மந்திரிகள்,' என்பது.

நிலைமை, ஆட்சியின் அலங்கோலம் அவ்வளவுக்கு மோசமாகி விட்டது, என்பதுதானே, இதற்குப் பொருள், அதன் வினைவுதானே, இத்தூற்றல் பாணங்கள்!

காங்கிரசைப்பற்றி எங்கள் எண்ணம் என்ன?

காங்கிஸ், நாட்டில் விழிப்புணர்ச்சியை ஊட்டியது. தேசீயப் போராட்டத்தை நடத்தியது!

நாட்டு மக்களிடையே நாட்டு விடுதலை கீதத்தை எழுப்பியது. தேசீயக் கனலைக் கக்கியது. வெள்ளை ஏகாதிபத்தியம் இந்த நாட்டை விட்டு வெளியேற உழைத்தது.

மேலே குறிப்பிட்டவற்றை நாங்கள் மனதார, மறுக்கவில்லை, மறைக்கவுமில்லை.

காங்கிரசின் இன்றைய நிலை, சுதந்திரம் பெற்ற பின்னர் உள்ளநிலை, என்ன?

காங்கிரஸ் இருப்பதா? கூடாதா? காங்கிர ஸுக்கு ஓட்டுப்போடலாமா? கூடாதா?

காங்கிரஸ் சாகவேண்டும்; சாகடிக்கப்பட வேண் டும். ஏன்!

காங்கிரஸ் அழியவேண்டும்; அழிக்கப்பட வேண் டும்! ஏன்?

காங்கிரஸ் ஒழியவேண்டும்; ஒழிக்கப்பட வேண் டும். ஏன்?

காங்கிரசின் மேல் உள்ள வெறுப்பால், அல்ல, நாங்கள் கூறுவது, காங்கிரசை ஒழிக்கவேண்டும், என்பது!

காங்கிரசின் மீது அன்பு உண்டு. காங்கிரசிலே, வீரர் வ. உ. சிதம்பரனர் இருந்ததை நாங்கள் மறக்க முடியுமா?

காங்கிரசிலே, திருப்பூர்க்குமரன் இருந்ததை மறுக்கமுடியுமா?

காங்கிரசிலே, உயிரையே பலியிட்ட பகவத் சிங்குகள் தந்த தியாகத்தழும்புகளை எண்ணமிருப்பதில்லை.

காங்கிரசிலே, தில்லையாடி வள்ளிம்மை போன்ற, உயிர்த்தியாகிகள், தமிழ் வீராங்கனைகள் விளங்கியதைப் புகழாதிருக்க மாட்டோம்!

பின், ஏன் காங்கிரஸ் அழியவேண்டும் என்கிறோம்.

காங்கிரஸ் அழியத்தான் வேண்டும்; அழிக்கப்படத்தான் வேண்டும்; என்று மீண்டும் கூறுகிறோம், அழுத்தந்திருத்தமாக. ஏன்? ஏன்?

மாடமாளிகையாக விளங்கிய, காங்கிரஸ் இன்று மண்மேடாகி விட்டது!

கோட்டை கொத்தளங்கள் போல் இருந்த காங்கிரஸ் இன்று குட்டிச்சுவராகி விட்டது!

மக்கட்பணிக்கும், பொதுத் தொண்டிற்கும் உறை விடமாயிருந்த காங்கிரஸ் இன்று, பதவி வேட்டைக் காடாக, கள்ளிகள் நிறைந்ததாக ஆகி விட்டது.

வீரர் சிதம்பரனர் இருந்த காங்கிரஸ் இன்று சில்லரைச் சிவஞானங்களாலும், சின்னதுகளாலும் காப்பாற்றப்படவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது!

காங்கிரஸ் கரைகிறது, கரைந்து கொண்டேவருகிறது! காங்கிரஸ், கருத்தில், பண்பில், பணிபுரியும் பாதையில் தவறிவிட்டது. தகாதவழியில் ஆழப் பதிந்துவிட்டது.

சுயநலம், சூழ்ச்சி, சுரண்டல், பதவி, பர்மிட்டு வேட்டை, என்பனவே, இன்றைய காங்கிரசின் இலட்சணமாக மாறி விட்டது.

இதைக் கண்டு நாங்கள், காங்கிரசிடம் அன்புள்ள நாங்கள் பரிதாபப்படுகிறோம். 'ஐயோ பாவம்' என்று அனுதாபப்படுகிறோம்.

அன்பு காட்டும் நாங்கள், பரிவு காட்டும்நாங்கள், அழிக்க வேண்டும் என்றும் கூறுகிறோம்.

'அழிக்கவேண்டும்' என்பது, அன்பின் விளைவால் ஏற்பட்ட முடிவுதான்.

அன்பு, எனவேதான், அழிக்கப்படவேண்டும் காங்கிரஸ் என்கிறோம்.

அன்புகொண்டோரே அழிவைக்கான விரும்புவதா? வேடிக்கை! விசித்திரம்! என்று எண்ணிட வேண்டாம். உண்மை, இது!

காங்கிரசின் கண்ணியமற்ற நிலையை காணும் போது, அது இருப்பதைவிட, இருந்து இன்னும் சிறப்பற்றுச் சீரழிவதைவிட, சாவதே மேல். அழிந்து விடுவது நல்லது, என்று கூறுகிறோம். தவறென்ன?

அன்புடையவர்கள்; ஆகவேதான், அழிக்க வேண்டும் காங்கிரசை, அது அலங்கோலப்பட்டுப் பின்னர் அழிவதற்கும் முன்பே, என்ற நல்லெண்ணத்தோடு கூறுகிறோம்.

அன்புகாட்டுவது; அழிப்பது. இரண்டும் நேர் மாறான, ஒன்றுக் கொன்று முரண்பட்ட பண்புகள் தான்.

நம் வீடுகளிலே, வீட்டுப் பிராணிகளை வளர்க்கிறோம். நாய், பூனை, போன்றவற்றை.

அன்போடு வளர்க்கப்படும் வீட்டுப் பிராணி நோய்வாய்ப்பட்டு மிகவும் அசதியடைகிறது. வயதும் ஆகிவிட்டது.

இந்த நிலையில் நோயாளியான நாயை மிருக வைத்தியரிடம் காட்டுகிறோம். வைத்தியர் பரிசோதித்து மருந்துகள் பல கொடுக்கிறார்.

பல மருந்துகள் கொடுத்தும், நாய் சுகப்படவில்லை. நோயின் வேகம் கடுமையாகவே இருக்கிறது.

நாயைப் பார்க்கவே மிகவும் கண்ணுவியாக இருக்கிறது. அதுபடும் வேதனையைக் காணச் சகிக்கவில்லை.

ஓடியாடி விளையாடிய நாய் ஒய்ந்து கிடப்பதைக் கண்டு, கண்ணீர் விடுகிறோம்; கவலைப்படுகிறோம்,

டாக்டர், நாய் பிழைக்காது, பிழைத்திடும் அறிகுறியே இல்லை என்று முடிவாகக் கூறிவிடுகிறார்.

பிழைக்காத, பிழைக்கமுடியாத நாயை வைத்துக்கொண்டு, அதுபடும் வேதனையைக் கண்டு கொண்டிருக்கவேண்டும், அது சாகும்வரை.

நாய் அழுகி, புழுத்து, வேதனை தாங்காது தவித்து, அலறியலறிக் குலத்து, உருக்குலைந்து, நடைப்பிணமாய் இன்னும் சிலகாலம், ஓரிரு நாட்கள் வாழப்போகிறது.

இந்தக் கோரக்காட்சி, கொடுமையான நிகழ்ச்சி, அன்புடன் வளர்க்கப்பட்ட, நாய்க்குத் தேவையா? இதனைக்காணவேண்டுமா? கண்டு சகித்திடவும் வேண்டுமா?

நிச்சயம் சாகப்போகிறது, ஆனல் சங்கடப்படுகிறது; தாளமுடியாது தவிக்கிறது நாய், நோயால்.

இந்த நிலை நீடித்து, நாய் மிகவும் சீரழிந்து, நிம்மதியற்று இறப்பதை விட, உடனே, உடனடியாக, இறந்துவிடுவது, இறக்கும்படி செய்வது மேல்.

நாயைச் சாகடித்து விடவேண்டும்; சங்கடப் பட்டு, வேதனைப்பட்டு, புழுத்துப் புழுங்கிச் சாவதைத் தடுக்க.

இதுவும் அன்புதான், சங்கட மின்றிச் சாகவழி வகுத்துத் தருவது.

இந்த நிலையில் நாயைச் சுட்டுக் கொன்று விடு கிறோம். இது மேல் நாடுகளில் சர்வசாதாரண சம்ப வம், நிகழ்ச்சி.

வாடி வதங்குவதைக் காணச் சகியாது, உடனே சாகடிப்பது, அன்புதான்.

அன்பில் விளைந்த கொடுமை! கொடுமையான அன்பு! (Cruel kindress)

கொடுமையான அன்பு! கொடுமை செய்திடுவ திலே அன்பு!

அன்பின் காரணமாகக் கொடுமை! கோரந் தவிர்க்க!

சகிக்க முடியாத சங்கடமான சாவை, சாவின் கோரத்தைக் காணுதிருக்க, அன்பு கொண்டிருக்கும், பிராணி, அதிகமாக அல்லல்பட்டு அவஸ்தைப்படு வதைக் காணமுடியாததால் விளைந்திடும் அன்பு, கொடுமையான அன்பு (Cruel kindness)

இது விசித்திரமாகத்தோன்றலாம் சிலருக்கு. விசித்திரமல்ல; காட்டு கடப்பு!

காந்தீயத்திற்கும் இது புறம்பானதல்ல. காந்தியாரே கடைப்பிடித்தது, கொடுமையான அனபு.

ஆம்! காந்தியார் கூடக் கையாண்டிருக்கிறார் இத்தகைய அன்பை! அவருடைய ஆசிரமத்தில்.

காந்தியாரின் ஆசிரமத்திலே ஒரு கன்றுக்குட்டி. அது நோய்வாய்ப்பட்டு மிகவும் சங்கடத்திற்குள்ளாகிறது. எந்த விதச் சிகிச்சையும் பலன் தரவில்லை.

மருத்துவர் கைவிட்டார், கன்றுக்குட்டி, பிழைப்பது அரிது, பிழைக்காது என்று கூறிவிட்டார்.

கன்றுக்குட்டி, மரணப் போராட்டத்தில் மன்றுடிக் கொண்டிருந்தது.

மனச்சங்கடமான காட்சி, நிலைமை. களிப்புடன் துள்ளி விளையாடிய கன்று துவண்டு கிடந்தது. துயர் தரும் நிலை!

காந்தியார் கன்றைச் சுட்டுக் கொன்றிட ஒப்பினர், அதன் கோரத்தை, சங்கடத்தைக் காணச் சகியாது!

இதன் விளைவாகக் காந்தியாரின் ஆசிரமத்தில் மரணத்தின் வாயிலில் மன்றுடிக் கிடந்த கன்று, சுட்டுக் கொல்லப்பட்டது.

கொடுமையான அன்பு, அகிம்சையின் ஆசிரமத்திலும் நடந்தது, நடத்தப்பட்டது!

இன்றைய காங்கிரசிடம் நாம் காட்டும் அன்பு, இத்தகையது தான்.

கொடுமையான அன்பு காட்டுகிறோம்; கோர நிலையை அடையுமுன் ஒழிக்கப்பட வேண்டும், காங்கிரஸ் என்று கூறுகிறோம்.

எனவே காங்கிரசிடம் அன்புகாட்டுங்கள், பரிவு, பாசம் காட்டுங்கள்! கொடுமையான அன்பு காட்டுங்கள் என்று கூறுங்கள்.

சுட்டுக் கொல்லுங்கள் காங்கிரசை, அழியுங்கள் அதனை! சுட்டுக் கொல்லுங்கள், காங்கிரசை!

சுட்டுக்கொல்லுங்கள் என்றதும் துப்பாக்கி யேந்திய, படை திரட்டும் வேலை யென்று யாரும் மருண்டிட வேண்டாம்.

காங்கிரஸ் மரணக்குழியில் இருக்கிறது! கடைப் பிணமாகக் கிடக்கிறது. அது படும் அல்லல் அமோகம். அதனைப் போக்கிட வேண்டும், அதனை அழித்திட வேண்டும் என்கிறோம்.

இதற்குத் துப்பாக்கி தேவையில்லை, சுட்டுக் கொன்றிட, காங்கிரஸ் மனிதனுமல்ல, மிருகமுமல்ல.

காங்கிரஸ் ஒழிய, ஒழிக்கப்பட உங்கள் துப்பாக்கிகளை, ஓட்டுரிமைச் சீட்டுகளை, ஓட்டுக்களை மாட்டுப் பெட்டியில் போடாது, மற்றபெட்டியில் போட வேண்டும்.

மாட்டுப்பெட்டி காலியானால் மாட்டுப்பெட்டிக்கு மரணம் ஏற்படும் காங்கிரஸ் கரையும், அழியும், அழிக்கப்பட்டுவிடும். கொடுமை குறையும், ஒழியும், நீங்கும்.

வியாதி மூற்றி, விம்மும் காங்கிரசை ஒழித்திட அதனிடம் அன்பு காட்டுங்கள்.

மீண்டும் ஆளும் பளுவை, சுமையை அதனிடம் தந்து அதைக் கரைத்துக் கஷ்டத்திற்குட் படுத்த வேண்டாம்.

அன்பு செலுத்துங்கள், சீக்கிரம் அழித்திட அன்பு செலுத்துங்கள், கொடுமையான அன்பு காட்டுங்கள்.

மாட்டுப் பெட்டி காலி! மக்களாட்சி மலர்வதைக் காண்பதற்குத் தரப்படும் அச்சாரமாகும். இதனை மறவாதீர்.

மீண்டும் கூறுகிறேன், இந்த மாடுகளைச் சட்ட சபைக்கு அனுப்பாதீர்.

மாடுகள் சட்டசபையினுள் நுழைந்தால், அது மாட்டுப்பட்டியாகவே மாறிவிடும்; சட்டசபையாக இராது.

மாட்டுப் பெட்டியைக் காலியாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

பின்யாருக்கு ஓட்டுப்போடவேண்டும்? எந்தப் பெட்டியில்!

நீங்கள் தேர்தலில் நிற்கிறீர்களா? என்று எங்களைப் பலர் கேட்கிறார்கள்.

நாங்கள், திராவிட மூன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள், தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் தேர்தலில் போட்டியிடவில்லை.

சேலத்திலே, கழகம் செய்தமுடிவின்படி, தேர்தலில் போட்டியிடவில்லை.

நமக்கு நிற்பதற்குத் தகுதியோ, திறமையோ இல்லையென்ற காரணத்தால் அல்ல, சட்டசபைக்குப் போக மறுப்பது.

இன்றைய சூழ்நிலையில், நாம் சட்டசபைக்குப் போவது, சரியல்ல என்று பட்டதால் தான் நாம் சட்டசபைக்குப் போகாமல் இருப்பது.

சட்டசபைக்குப் போகாததால் நமக்கு அரசியல் ஞானமில்லை என்று கூறுவதற்கில்லை. நம்மிடையே பலர் உண்டு, அரசியல் ஞானம் படைத்தோர்.

அரசியல் யூகமும் நம்மிடமிருக்கிறது, எனவே தான் சட்ட சபைக்குச் செல்லவில்லை; செல்லப் போவதில்லை, இப்போது.

இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடாதபோது, நாம் யாரை ஆதரிப்பது, யாருக்கு நமது ஓட்டுகளைப் போடுவது என்பன போன்ற பிரச்சினைகள் நம்மைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

நாம் தேர்தலைப்பற்றிக் கவலைப்படாது இருந்த நேரத்தில், நமது மதிப்பிற்குரிய, கம்யூனிஸ்டுக் கட்சி

KAMARAJ NEWS MART
36/18 Kalava Chetty St
CHINTADRIPET. MADRAS-2.

யைச் சார்ந்த தோழர் ஜீவானந்தம் அவர்கள பல முறை அண்ணு அவர்களிடம் வந்து இதுபற்றிப் பேசினர்.

தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும். மீண்டும் காங்கிரசே நாட்டை ஆளும்படி விட்டால் என்னவாகும்? நாமெல்லோரும் ஒன்றுபட்டு, கூட்டாக, ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும்.

நீங்களோ (தி. மு. க.) தேர்தலில் நிற்கப்போவதில்லை; நாங்கள் நிற்கிறோம். எங்களை ஆதரிக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டார்.

இதைக் கேட்ட அண்ணு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். யார் யார் இந்த ஐக்கிய முன்னணியில் இடம் பெறுவோர் என்றும் கேட்டார்.

இதற்கு ஜீவா, கம்யூனிஸ்டுக்கட்சி, திராவிடர் கழகம், திராவிடமுன்னேற்றக்கழகம் ஆகிய மூன்றும் தான் என்று பதிலளித்தார்.

அண்ணு, 'முதலில் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகத்தை ஸ்தாபன ரீதியான ஒரு கட்சி என்பதை ஒப்புக்கொள்கிறதா? ஒப்புக் கொண்டால் தான் ஐக்கிய முன்னணியில் சேர முடியும்! பெரியாரின் கருத்தென்ன' என்றார்.

பெரியார், திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு கட்சியா? இருக்கிறதா என்று கேட்கிறார் என்று விடையளித்தார் ஜீவா.

அண்ணை, இது விஷயத்தில் தானே முடிவு கூறி விட முடியாது, கூறவும் மாட்டேன். எங்கள் கழகத் தின் பொதுக் குழுவைக் கூட்டி, அதன் கருத்தைத் தெரிந்து கொண்டுதான் முடிவாக எதனையும் தெரி விக்க முடியும் என்று கூறிவிட்டார்.

இதன்படி, நவம்பர் திங்களிலே மதுரையில் பொதுக்குழு கூடி, தேர்தல் பற்றிய பல பிரச்சினை களையும் தீர ஆராய்ந்து, முடிவுகட்டியது.

அதன்படி, நமது இலட்சியத்தை, நமது ஜீவ தாரப் பிரச்சினையான 'திராவிட நாட்டுப்' பிர வினைக்கு ஆதரவு தரும் வகையில் யார்யார் சட்ட சபை, மக்கள் சபை இவற்றில் பேசிட உழைக்க உறுதி தருகிறார்களோ, ஒப்பி அதனை ஒப்பந்தச் சீட்டில் கையெழுத்திட்டு; உறுதிப் படுத்துகிறார் களோ அவர்களையே, தேர்தலில் ஆதரிப்பது இதில் கம்யூனிஸ்டு கட்சிக்கு முதன்மை அளிப்பது' என்ற முடிவை வெளியிட்டோம்.

இதற்குக் கம்யூனிஸ்டு கட்சியினர் ஒத்துவர வில்லை. ஒத்துவராதது மட்டுமல்ல, நமது பிரச்சினை யையே, திராவிட நாட்டுப் பிரச்சினையே, தவறு என்று பேசிடும் அளவுக்கு, எழுதிடும் அளவுக்குத் தமது போக்கை மாற்றிக்கொண்டனர்.

ஆனால், நமது பொதுக் குழுவின் முடிவிற்கு, இணங்கி, ஒப்பி, ஒப்பந்தச் சீட்டில் கையொப்ப மிட்டு சுமார் நூற்று ஐம்பதின்மருக்குமேல் அனுப் பினர்.

KAMARAJ NEWS MART
36/18 Kalaya Chetty St
CHINTADRIPET. MADRAS-2.

கையெழுத்திட்ட அனைவரையும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்துவிடவில்லை, நாம்.

நன்றாக அலசிப்பார்த்து, கையெழுத்திட்டவர், முன்னாள், இந்நாள், நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கி; வருங்காலம்பற்றிய யூகத்தையும் துணைக் கொண்டு, அந்தந்த மாவட்ட, உறுப்பினரையும் கலந்து, ஆலோசித்த பின்னர்தான் ஏறக்குறைய எழுபது பேருக்குமேல் ஆதரவுதந்துள்ளது, நமது கழகம்.

இன்றையப் பிரச்சினை, நாம் ஆதரவு தந்துள்ள வர்கள், திராவிட நாட்டுப் பிரிவினையின் பேரால், தேர்தலுக்கு நிற்போர், வெற்றிபெற்று, நமது குரலை, நமது இலட்சியக் கீதத்தைப் பாராளும் மன்றத்திலும், சட்டசபையிலும், முழக்கிட வேண் டும்.

நமது ஆதரவைப்பெற்றவர்க்கே நமது ஓட்டுரி மையை வழங்கவேண்டும்

அவர்கள் தியாகிகளா? குண்டடிபட்டவர்களா? சிறைக்குச்சென்றவர்களா?

அடக்குமுறைக்கு உட்பட்டு அடக்குமுறையின் கோரத்தழும்புகள் இருக்கின்றனவா?

அவர்கள் என்ன செய்தார்கள், என்பன போன்ற வற்றையெல்லாம் கூறி, அதற்காக ஓட்டுப் போடவேண்டு மென்று, நாங்கள் கேட்கவில்லை, கேட்கப்போவதுமில்லை.

அவர்கள் நம்மவர்கள், நமது இலட்சியத்தை மனமார ஒப்பியவர்கள்! நமது குரல்கள், நமக்குப் பதிலாக, நாமில்லாத, நாம் போகாத, போகவிரும் பாத, சட்டசபையிலே, பாராளுமன்றத்திலே!

அவர்கள், திராவிட நாட்டுப்பிரிவினையின் மீது கொண்ட நம்பிக்கையை, நமது இலட்சியத்துக்கான எல்லாவற்றையும் செய்யப்போகிறவர்கள், செய்ய உறுதி கொண்டவர்கள்!

திராவிடநாடு திராவிடருக்கே! திராவிடம் பிரிதல் வேண்டும், பிரித்தே ஆகவேண்டும்; பிரித்தே தீரு வோம். என்ற கோட்பாடே, அவர்களின் இலட்சியம்; அது நமது இலட்சியம்; இருதய கீதம்.

இதற்காக, இந்த இலட்சியத்திற்காக தி. மு. க. ஆதரவுபெற்றவர்கட்கே ஓட்டுப் போடவேண்டும்.

நம்மை நாம் வாழ்வித்துக் கொள்ள, நமது இலட்சியத்தை, சட்டசபையிலும் எடுத்துப்பேச, நமது தூதுவராகச் செல்வதால், ஒப்பந்தச் சீட்டில், கையெழுத்திட்டோருக்கே நமது ஓட்டு என்பதை மறக்கக்கூடாது.

சுரண்டல் காடாகவுள்ள திராவிடம் சுகம் பெறும் இலட்சியம், வாழ்விழந்து, வதங்கித் தேம் பும் சமூதாயம்; வாழ்வுபெற்று, எழுச்சியுற்று, இன்பத்திராவிடங்காணும் திட்டம் நமது குறிக் கோள்.

இந்தக் குறிக்கோளை நழுவவிடாது, இலட்சியப் பாதையிலிருந்து இடராது, அதே நோக்கத்தில், நாச

காரக் காங்கிரசையும் ஒழித்திட, தேர்தலில் நாம் ஆதரவுதரும் தோழர்களையே ஆதரியுங்கள், அவர் களுக்கே உங்கள் வாக்கை, ஓட்டை, உரிமைச் சீட்டை, திராவிடத்தின் நல்வாழ்வுக்காக அளியுங் கள், அளியுங்கள் என்று மறுமுறையும் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் காலத்திலே, காங்கிரசை முறியடிப்ப தற்கான ஒரே, பொதுப்படையான கொள்கையை முன் வைத்து, ஐக்கிய முன்னணியில் சேர, நம்மைக் கம்யூனிஸ்டுகள் அழைத்தனர்.

ஐக்கிய முன்னணியின் ஒரு அங்கமான திரா விடர் கழகம், நம்மை திராவிட முன்னேற்றக் கழ கத்தை, 'அது கட்சியா?', என்று கூறியதாக தோழர் ஜீவானந்தம் சொன்னதையும், அதன் பின்னர் அண்ணை அவர்கள் பொதுக் குழுவைக் கலந்து, ஒப்பந்தச் சீட்டு ஏற்படுத்தியதையும் பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன்.

'ஒப்பந்தச் சீட்டில், கையெழுத்து, எம் ஒத்து ழைப்பு தேவையானால்' என்று கேட்டோம்.

காங்கிரசை ஒழிக்கவேண்டும், நாடு நலம்பெற.

நாலாண்டுக்கும் மேலாகவே, நாட்டை, காடாக் கிக் கொண்டிருப்போர் மீண்டும் நாடாள்வது, கூடாது, என்ற எண்ணம் எங்களுக்கு உண்டு.

தேர்தல் வருகிறது. காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொள்கிறது.

தேர்தலில் காங்கிரசை முறியடிப்பது, முக்கிய வேலை, முன்னணி வேலையுங் கூட.

தேர்தலில் பலப்பல கட்சிகளும், சுயேச்சை வாதிகளும் போட்டியிடுகின்றனர்.

தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி போட்டியிடு கிறது.

கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் சர்க்காரில், எண் ணற்ற கேடுகளை, அடக்கு முறைகளை அனுபவித்த வர்கள்.

காங்கிரசின் விரோதிகள்; நாட்டின் நலனை விரும்புபவர்கள்; நாம், (தி. மு. க.) தேர்தலில் நிற்க வில்லை, நிற்கப்போவதில்லை.

தேர்தலில் நிற்கும் கம்யூனிஸ்டுகள், தேர்தலில் நிற்காத நம்முடைய ஒத்துழைப்பைக் கோரினர், பொது எதிரியான காங்கிரசை, வீழ்த்த, தேர்தலில் தோல்வியுறச் செய்ய.

அவர்கள் நம்மை மட்டுமல்ல, கூட்டணிக்கு அழைத்தது; திராவிடர் கழகத்தாரையும் அழைத் தனர், அவர்களும் தேர்தலில் நிற்காத காரணத் தால்.

எனவே, ஐக்கிய முன்னணி என்பது, கம்யூ னிஸ்டு, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், என்ற மூன்று கட்சிகளையும் சேர்ந்த, மூன்று

சக்திகளின் ஒத்துழைப்பின் மூலம் உருவாக வேண்டிய ஒன்று என்பது நன்கு விளங்குகிறது.

மூவர் கூட்டு ஒரு பொதுநலனைக் கருதி.

மூவரும் சேர்ந்து உழைக்கவேண்டும் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக.

மூவரும் சேர்ந்து பாடுபடவேண்டும், காங்கிரசை முறியடிக்க.

மூவரின் சக்தி, மூன்று கட்சிகளின் செல்வாக்கு செயல்திறன், உழைப்பு, பிரச்சாரம் எல்லாம் சேர்ந்தது, காங்கிரசிற்கு எதிரான ஐக்கிய முன்னணி.

மூன்று கட்சிகளும் தோளோடு தோள் சேர்ந்து, தோழமையாகப் போராடவேண்டும், பொது எதிரியோடு, ஒரு குறிப்பிட்ட, குறிப்பிட்ட காலத்தில் பலாபலன் தெரிந்து, முடிந்து விடக் கூடிய, பொது இலட்சியத்தில் வெற்றிபெற்றிட.

இதில் மூவருக்கும் பொது இலட்சியத்தில் பற்று, பாசம், நம்பிக்கை இருக்கவேண்டும்; இருக்கிறது.

மூவரும் ஒன்றுக உழைக்க வேண்டும். வேலை செய்யவேண்டும். பிரச்சாரம் செய்யவேண்டும். இதற்குத் தோழமை முக்கியம்.

தோழமை; மூவருள்ளும், பேதாபேதமின்மை, நல்லுணர்ச்சி, கட்டுப்பாடு, ஒருவரை யொருவர் மதிக்கும் மனப்பண்பு, தோழமை (Comrade ship),

புரிந்து கொள்ளும் தன்மை, புரிந்து, நன்கு தெரிந்து கொண்ட, பரஸ்பரம் நன்மதிப்புள்ள மனப்பான்மை தேவை.

சாதாரணமாக, ஒரு கூட்டு வியாபாரக் கம்பெனி ஆரம்பித்தால், மூவர் சேர்ந்தால், மூவரும் ஒருவரை யொருவர், சேர்ந்தும், தனித்தனியேயும், ஒருவருக் கொருவர், மாற்று, மாச்சாரியம் கொண்டவர்களாக இருத்தல் கூடாது; இருந்தால் அந்த கூட்டுக் கம்பெனி, ஒரு சிலரின் கொள்ளைக் கம்பெனியாக மாறி, பலரின் பணம் பாழாவதைத் தானே காணமுடியும்.

வியாபாரத் துறையிலேயே, கூட்டாக நடத்த, நம்பிக்கை, அதைவிட நல்லெண்ணம், ஒருவரைப் பற்றி மற்றவர்கொண்டாலன்றி, வெறும் இலாபத்தைக் கருதி நடத்தப்படும் வியாபாரம், ஒழுங்காக நடக்காது; நடத்தமுடியாது.

கம்யூனிஸ்டுகள், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டினிடமும் நல்லெண்ணத்தோடு, நன்மதிப்போடு நடக்க வேண்டும்.

அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுகளையும், திராவிடர் கழகத்தையும்மதிக்க வேண்டும்

அப்படியே, திராவிடர் கழகமும், கம்யூனிஸ்டுகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் மதிக்கவேண்டும், நல்லெண்ணத்துடன்.

இந்த முறையில் ஒருவருக்கொருவர், சம அளவு அன்பும் ஆர்வமும் கொண்டு தோழமையோடு நடந்தால் தான், நடக்கும் நிலைமை, நினைப்பு, நடப்பு, இருந்தால் மட்டுமே, 'ஐக்கிய முன்னணி,' உண்மையிலேயே 'ஐக்கியமுன்னணி'யாக முடியும்.

இது ஒரு சர்வசாதாரண உண்மை, நியதி, அன்றூட நிகழ்ச்சி. இது புரியும், கம்யூனிஸ்டுகளுக்கு.

திராவிடர் கழகம், ஐக்கிய முன்னணியில் ஒரு அங்கம் வகிக்கிறது. மற்றொன்று கம்யூனிஸ்டுகள். மூன்றுவதாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அழைக்கப்படுகிறது, கம்யூனிஸ்டுகளால், ஐக்கிய முன்னணியில் சேர.

இதில், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தை' ஒரு கட்சியாகவே ஒப்பமுடியாது என்று தெரிவித்து விட்டது என்று, கம்யூனிஸ்டு தோழர் ஜீவானந்தம் சொன்னார்.

தோழமை! இல்லை, ஐக்கிய முன்னணியில்.

தோழமைக்கு, வித்தே இல்லை. அதையும் தோழர் ஜீவானந்தமே கூறிவிட்டார்.

தோளோடு தோள் சேரும், சேர்ந்து பணியாற்றும் பண்பு இல்லை; ஜீவானந்தம் கூறியதின் பொருள் இது தானே.

மூவர் சேர்ந்த ஒரு ஐக்கியத்தில், மூவரில் ஒருவர் மூன்றில் சேர்ந்த ஒருவரை மதிக்கவில்லை. மதிக்கவே முடியாது என்ற நிலை.

முக்கூட்டு! ஐக்ய முன்னணி! ஐக்கிய மனப் பான்மை, ஐக்கிய மனப்பண்பு எங்கே!

எப்படி இப்படிப்பட்ட ஐக்ய முன்னணியில் சேர்வது, சேரமுடியும்!

எப்படி எங்களை அழைக்கலாம், இப்படிப்பட்ட, பொருந்தாத, ஐக்ய மற்ற, ஐக்ய முன்னணிக்கு?

நியாயம், நீதி, நேர்மை, நடை முறைக்கு, ஒத்து வரும் எதாவது, இருக்கின்றதா?

மனமார எப்படி ஒப்பிச் சேரமுடியும், இத்த கைய ஐக்ய முன்னணியில், என்று கேட்கிறேன்.

இப்படிப்பட்ட அலங்கோல ஐக்ய முன்னணி யில் சேரும்படி, சேர்ந்து ஒத்துழைக்கும் படி, நம்மை அழைத்தனர், கம்யூனிஸ்டுகள்.

நாம், நமது, மதிப்பை, தன் மானத்தை, தாழ மையைப்பறிகொடுத்து ஐக்ய முன்னணியில் சேர்ந் திட முடியுமா?

இப்படிப்பட்ட நிலையிலும், நாம், நமது இலட்சி யத்தையும் விடாது, அதே சமயத்தில் பொது எதி ரியை ஒழிப்பதிலே, அழிப்பதிலே, காங்கிரசைத் தேர் தலில் முறியடிப்பதிலே நமது ஒத்துழைப்பைத்தரத் தயங்கவில்லை, கம்யூனிஸ்டுகளுக்கு.

நமது நேசக்கரம், நீட்டப்பட்டது; அவர்களது ஆதரவாளர்களாக வாய்ப்புத் தந்தோம்.

ஐக்ய முன்னணியில் அங்கம் வகிக்கும் நிலையை உண்டுபண்ண வில்லை, நீங்கள்; என்றாலும் எங்கள் ஒத்துழைப்பு, இதோ! என்று நேசக் கரத்தை நீட்டி னேம், கம்யூனிஸ்டுகளுக்கு.

கம்யூனிஸ்டுகளுக்கே முதலிடம்! முதற் சலுகை!

உறவுச் சீட்டில் கையெழுத்திடுபவரில், நம் இலட்சியத்திற்கான, தன்னலியன்ற எல்லாவற்றை யும் சட்டசபை, மக்கள் சபையில் செய்வதற்கான உறுதியளிப்பவரில், முதலில் முக்கியமாகக் கம்யூ னிஸ்டுகளுக்கான் ஆதரிப்பதாகக் கூறினேம்.

உறவு முறை, இதுவரை கட்டிக் காத்து வந்த இலட்சியத்திற்கு பங்கம் வராத வகையில் இருக்க வேண்டும் என்று விரும்பினேம், இதில் தவறென்ன?

உங்களை, உங்கள் கட்சியினரை, கம்யூனிஸ்டு அபேட்சகர்களைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்ய, காங்கிரசைத் தோற்கடிக்க எங்கள் ஒத்துழைப்பைத் தரச் சம்மதித்தோம்.

உறவுமுறையைப் புரிந்து கொள்ளும் விதத் திலே, ஒரு நிபந்தனை!

எங்கள் இலட்சியத்தை விட்டுக்கொடாது, எங் கள் இலட்சியமான இன்பத்திராவிடப் பிரிவினைக்கு ஆதரவு தரும் முறையில், உறவு அமைதல் வேண் டும் என விரும்பினேம்!

இது, கம்யூனிஸ்டுகளுக்குப் பிடிக்க வில்லையானல் மறுத்துவிட்டிருக்கலாம், ஒப்பந்தச் சீட்டிலே, கையெழுத்திட.

இதில் கையொப்ப மிடக்கூடாத நிலையிலே கம்யூனிஸ்டுகள் இருந்தால், 'முடியாது' என்ற சொல்லோடு முடித்து விட்டிருக்கலாம்!

ஐக்யமற்ற, ஐக்ய முன்னணிக்கு அழைத்தனர்!

சேராமுடியாத சூழ்நிலையில் இருக்கிறதே என் றேரும்.

எங்கள் இலட்சியத்தின் எதிரொலியாக இருப்ப வர்க்கே ஒத்துழைப்பு என்றேரும்.

'முடியாது' என்று சொல்வதோடு நின்றிருக்க லாம் கம்யூனிஸ்டுகள்!

'திராவிட நாடு' பிரிவினையே தவறு, என்று பேசுமளவுக்குத் தமது போக்கை மாற்றிக்கொண்ட னர்.

மதுரை பொதுக்குழு முடிவிற்கு முன்வரை, தோழர் டாங்கே போன்றார் எல்லாம் வடநாட்டில் கூட 'திராவிட நாடு' தேவைதான் என்றுபேசினர்.

'உறவு முறைக்கு உறுதி தா' என்றதும், உன் பேச்சே தவறு, போக்கே தவறு, திட்டமே தவறு,' என்று குரலே மாற்றிக் கொண்டனர்.

எது தவறு? எது சாத்திய மற்றது? 'திராவிட நாடு' என்பது என்ன?

திராவிட சமுதாயம் என்பதே இல்லையா ? திராவிட மொழிகள் என்று வரலாறு தரும் சான்றைத் தெரியாதவர்களா ? அல்லது தெரிந்தும் தெரியாதது போல் நடிப்பவர்களா, கம்யூனிஸ்டுகள் ?

திராவிடர்—ஆரியர் ; திராவிடக் கலாச்சாரம்—ஆரியக் கலாச்சாரம் வேறு வேறு என்பவற்றைப் பற்றி, வரலாற்றுச் சான்றுகள் தந்தோம், பல ஆண்டுகளாக. பழக்க வழக்கங்கள் ; மக்கட் பண்பு விளக்கங்கள், இத்தனையும் எடுத்துரைத்தோம்.

எங்கள் இனம் வாழ, விழிப்புற்று எழுச்சிபெற திராவிட சமுதாய அமைப்பு மீண்டும் புத்துணர்ச்சி பெற, 'திராவிடநாடு' தேவை என்பதை ஆயிரமாயிரம் மேடைகளிலே கூறிவந்திருக்கிறோம்.

பாக்கிஸ்தானத்தை, மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மக்களை, ஒரு இனமாக மதித்த, கம்யூனிஸ்டுகள், மொழியால், வழியால், வரலாற்றால், இனத்தால் ஒன்றுபட்டுள்ள, திராவிடரை, திராவிட இனத்தை, திராவிட நாட்டை, (ஆந்திர, தமிழ், கேரள, கன்னடம் சேர்ந்த) மறுக்கவோ, மறைக்கவோ முடியுமா ? முடியாது !

திராவிடர் தனி இனமாக வாழ்ந்தவர்கள். இடையே, சூது, சூழ்ச்சி, சமயம், சன்மார்க்கம் என்ற பலப்பல போர்வையால் மயக்கப்பட்டு, மனவளம் இழந்தவர்கள்.

மனவளம் இழந்தோர் இன்று மீண்டும் மன வளம் பெற்று தமது திரு இடத்தைப் பெற்றே தீரு வோம் என்று தீரப் போர்ப்பரணி பாடுகின்றனர்.

இத்தப் போர்ப்பரணியை மறைத்திடவோ, மருட் டிடவோ எந்தக் கனகவிசயர்களாலும் முடியாது ! மீண்டும் வில்லவன் கோதை விருந்துகள் கிடைக் காது !

கம்யூனிஸ்டுகள் நம்முடைய விரோதிகள் அல்ல ; ஆனல் நம்முடைய விரோதத்தை அவசியமற்ற முறையிலே உண்டாக்கிக்கொள்ளும் பணியிலே இறங்குகிறார்கள் !

கம்யூனிஸ்டுகள் நம் ஒத்துழைப்பைப் பெற வேண்டியவர்கள் ; ஆனல் நம்மிடமிருந்து விலகி ஓடுகிறார்கள் !

நம் இலட்சியம் தவறு என்பதோடு அவர்கள் நிற்கவில்லை.

இலட்சியம் தவறு என்பதையும் கடந்து, கம்யூ னிஸ்டுகள் செய்த தியாகத்தை வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரசாரம் செய்கின்றனர் ; பலம் பெறுகின்றனர், என்றும் தோழர் ஜீவானந்தம் பேசினராம்.

'ஐயோ, பாவம் !' இந்த நிலைக்கா உங்கள் பிரச்சாரம் இறங்கிவிடவேண்டும்.

நான் கூறுகிறேன் கம்யூனிஸ்டுகள், பட்ட கஷ்ட நஷ்டங்களைப்பற்றி, அடிதடிகளைப்பற்றி, அடக்கு

KAMARAJ NEWS MART
36/18 Pulava Chetty St
CHINTADRIPET. MADRAS-2.

முறைக்கு ஆளான அல்லல்களைப்பற்றி, அந்தாது மக்களிடையே, மாற்றுக் கட்சியினரை ஆளவந்தார் கள், காங்கிரசாராராா் நடத்தும் முறை; கொடுங் கோன்மைபற்றி, நாங்கள் பேசாதிருந்தால், நூற்றி நாற்பத்துநாலு தடை உத்திரவுகளையும் மீறி, பிரச் சாரம் செய்யாமலிருந்தால், இவர்களுடைய, 'தியாகம்' மக்கள் மனதிலே ஊன்றியிருக்குமா?

மக்களிடையே, மந்திரிமார் மீது வெறுப்பு உண் டாகித்தான் இருக்குமா!

எனவே, கம்யூனிஸ்டுகளின் இன்றைய பிரச் சாரத்திற்கான சூழ்நிலையை, நாங்கள் உண்டாக்கித் தந்தோம் என்பதைப் பூரிப்போடு, பெருமிதத்தோடு கூற ஆசைப்படுகிறேன்.

கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை வைத்து முன் னேறும் அளவுக்கு நாங்கள் 'தியாகப்பஞ்சத்தில், இருப்பவர்களல்ல!

முதலில் 'தியாகம்' என்றால் என்ன? தியாகத் தின் இலட்சணந்தான் என்ன?

'தியாகம்' என்பது, கொடுமையை அனுபவிப் பதுமட்டுந்தானே? குண்டடிபடுவது மட்டுமேதானே? வறுமையால் வாடுவதே போதுமா, 'தியாகி'ப் பட்டம் பெற! எது தியாகம்'?

பலாத்காரத்தில் இறங்கி, அதனால் அடக்கு முறைக்கு ஆளாகி அவதிப்பட்டவர்களும் தியாகிகள் தானே?

அடி, உதை, குத்து, வெட்டு, பட்டிடுவது மட்டுமே தியாகமாகிவிடமுடியுமா ?

பலாத்காரத்தினல் பட்ட அல்லல்கள் விளைத்திடும் பயன்தான் என்ன ?

'தியாகி' யாவது சுலபம், அடி, உதை, குண்டுக் காயம் பெறுவது பிரமாதமல்ல !

அர்த்தமற்ற காரியங்களிலே, அநாவசியமான நேரத்திலேயெல்லாங்கூட வீண் மோதல்களால் இப் படிப்பட்ட 'விருதுகள்' பெறமுடியும், அதுவல்ல தியாகம், அதல்ல பெரிது ;

நேர்மையான காரணங்களுக்காக, இருதய பூர்வ மான போராட்டத்திலே கிடைக்கும் தியாகம்; பலன் தரும் தியாகம், பெரிது ; பயன் பெரிது, பயன் பெரிது !

தியாகம் என்பது என்ன ?

விடுதலைப் போராட்டத்திலே,படைவரிசையிலே சேர்ந்துள்ள அத்தனை பேரும் தியாகிகள்தான்.

தன்னைத் துறந்து, தன் உற்றூர் உறவினர், பெண்டு பிள்ளைகள் அத்தனை பேரையும் மறந்து போர்க்களம் புகும் வீரர்கள் அத்தனை பேருமே தியாகிகள்தானே ?

போர்க்களத்திலே, அடிபட்டு, குண்டு பாய்ந்து மடிந்தவர்கள் மட்டுமே, தியாகிகள் என்றூல் மற்றவர் தியாகிகள் இல்லையா ?

படை வரிசையிலே, முன்வரிசை, பின்வரிசை உண்டே!

முன் வரிசையில் உள்ளவர்கள் உயர்ந்தவர்கள்; பின்வரிசையில் உள்ளவர்கள் தாழ்ந்தவர்கள் என்பது எந்த நீதிக்குப் பொருந்தும்!

நாட்டு விடுதலையில் நாட்டங் கொண்டுள்ள அத்தனை வீரரும் தியாகிகள்தானே?

முன்வரிசையிலிருப்போரிலும் ஒருசிலர் போரில் இறந்தால், இறந்தவர்களை நாம் பாராட்டுகிறோம். சரி; செய்யவேண்டியதே!

அதே நேரத்தில், அடிபட்டவர்கள்; இறந்தவர்கள் மட்டுமே, புகழுக்குரியவர்; தியாகிகள் என்று கூறிடமுடியுமா?

ஒருசிலர் காயமடைந்து, கஷ்டப்பட்டு, வேறு சிலர் முண்டமாகி, உயிர்விட்டு நாட்டு விடுதலையில் பலியாகின்றனர்.

பலியானவர்களை, காயம்பட்டவர்களின் தன்னலமற்ற, பயன்தரும் தியாகத்தை முன்னிறுத்தி, மற்றவர் ஆர்வமும் ஆற்றலும் பெற்றிடுவர்.

ஆனால், பலியானோர் மட்டுமே தியாகிகள் என்று கூறுவது தியாகத்தின் இலட்சணத்திற்கே புறம்பானதாகும்.

தியாகம்—தானுக, வலுவில் பலாத்காரத்தைத் துணைக்கழைத்துப் பெறுவதல்ல!

தியாகம்—கண்மூடித்தனமான, காரண காரிய மற்ற மோதுதல்களினூலேற்படும் சேதத்தின் மூலம் பெறுவதல்ல!

தியாகம்—காட்டுமிராண்டிச் செய்கைகளின் விளைவுமல்ல!

தியாகம்—வியாபார வேட்டைச் சரக்கல்ல; வியாபாரத்தில், தேர்தல் வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கென்றே தயாரிக்கப்படுவதுமல்ல.

தியாகத்தின் பேரால், தியாகத்தை முன்வைத்து, தேர்தல் வேட்டையாடுவதும் விவேகமல்ல; விளையும் பயனும் குறைவாகத்தான் இருக்கும்.

தியாகம்—விலை பேசப்படும் பொருளாக்கப்படக் கூடாது; அந்த முறையிலே 'தியாக' புத்தி வளரக் கூடாது; வளரவிடவும் கூடாது.

தியாகம்—நல்லதொரு பயன் கருதி செய்யப் படும் முயற்சி, காரியம்.

தியாகம்—நல்ல முடிவைக் கருதிச் செய்யப்படும் தன்னலமற்ற சேவை; தொண்டு.

தியாகம்-தன்னலமற்ற சேவையை-தொண்டை, எதிர்ப்பு, ஏளனம், ஏசல், பூசல் எதையும் பொருட் படுத்தாது தொடர்ந்து செய்யும் மனப்பண்பு-மன வளம், மனவலிமை.

தன்னலமற்ற, நல்ல பயன் கருதி, பயன்தரும் முடிவைக்காணச் சலியாது, சளைக்காது ஆற்றும் செயல், செயலாற்றும் பண்பு-தியாகம்.

தியாகம்—பலவகைகளிலே உண்டு. பலமுறைகளிலேயும் உண்டு.

தியாகம்—அவரவர் அகராதிப்படியும் மாறுகிறது; மாற்றிக்கொள்ளப்படுகிறது.

எது எப்படியாயினும், தியாகம் நன்மை தரும் நல்லதொரு முடிவுக்காக தன்னலமற்ற, இலட்சியத்தைக் காணச்செய்யப்படும் ஒரு விடுதலைப்படை வரிசையாகும்.

இந்தப் படை வரிசையிலே, பயன் தரும் தியாகத் தீயில் குதித்திட நாம் எப்போதும், தயங்கியதில்லை.

நமது வாழ்வே, தியாகச் சுழலில் அமிழ்ந்து கிடக்கிறது.

நமது ஒவ்வொரு முன்னேற்றமும் தியாகத்தீ மிதித்துத்தான் செல்லவேண்டியிருக்கிறது!

கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை வைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முன்னேறுகின்றனர்!

என்ன வார்த்தை, இது?

கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை விலைபேசித்தேர்தல் வியாபாரம் நடத்தும் கயமைத்தனம் எம்மிடம் கிடையாது?

கம்யூனிஸ்டுகளை ஆதரிப்போம் என்று பயங்காட்டி, மிட்டா, மிராசுகளின் தோழனுய் விளங்கும்

விபரீத விசித்திர புத்தி படைத்தவர்களுமல்ல நாங்கள்.

நாங்கள் கம்யூனிஸ்டுகளின் போராட்டத்தைப் பாராட்டினேம்; மேலும் பாராட்டுகிறோம்.

அவர்கள் பட்ட அல்லல்கள், அடக்குமுறைக் கொடுமைகள், ஆர்ப்பாட்டக் குண்டுக்கு இரையான கொடுமைகள் அத்தனையும் எம்முடைய சிந்தனையைக் கிளறி, எம்முடைய, கண்ணீர்த் துளிகளைச் சிந்திடத் தவறவில்லை,

அவர்களின் போக்கைப் புரியும்படி மக்கள் மத்தியிலே பேசிடத் தவறவில்லை. அவர்களின் மீது வீசப்பட்ட கொடுங்கோன்மைகளை, எங்களைவிடக் கண்டித்தோர் வேறு எவருமிலர்.

அதே நேரத்தில் ஒருசில சமயத்தில் பலாத்கார வழியில் செல்வதாகத் தெரிந்த போதெல்லாம், நாம் கண்டிக்கத் தவறவில்லை.

தியாகத்தைப் பாராட்டினேம்; தியாகத்தின் மீது ஏவப்பட்ட கொடுமைகளைக் கண்டித்தோம்.

எவருமே, பாராட்டாத நேரத்தில் பாராட்டினேம்; எவருமே கண்டிக்கத்தவறிய, தவறியது மட்டுமல்ல, அஞ்சிய நேரத்திலேகூடக் கொடுமைகளைக் கண்டித்தோம்.

இதற்குப் பலன் 'தியாகப் பஞ்சத்திலடிப்பட்டு, அவர்களின் தியாகத்தை வைத்துப் பிழைப்பவர்கள்' என்று பேசுவதா?

இது முறையா? சரியா?, சந்தர்ப்பவாதமா? சிந்தித்துப் பாருங்கள்!

தியாகம்—எங்கள் பூந்தோட்டம்.

தியாகம்—எங்கள் வாழ்க்கை, வளம், முன்னேற்றப் பாதை, வழி, எல்லாம்.

தியாகப்பட்டியல் தேவையா?

எங்கள் மூச்சு, எங்கள் பேச்சு அத்தனையும் 'தியாகம்'தான,

எங்கள் வாழ்வு, வாழ்க்கைச் சுகம், கஷ்டநஷ்டம் அத்தனையும் தியாகம்தான்.

எங்கள் இலட்சியமே, சுயமரியாதை வாழ்வுக்கான பாதையே, இன்பத் திராவிடமே, தியாகத் தீச்சுழலில், தியாகத்தணலில் மிதந்து வருவது தானே?

தியாகத்தீயில், சுழலில், தணலில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கக்கட்டிகள்-எம் வீரர்கள்-எமது இலட்சியக் காணைகள்.

தியாகப்பட்டியல் தேவையா?

முதன்முறை நடந்த இந்தி எதிர்ப்புப் போரிலே எங்கள் இளஞ்சிங்கங்கள், தாலமுத்து நடராசன்—சிறையிலே செத்து மடிந்தனரே அது தியாகமல்லவா?

இந்திப் போரிலே ஆயிரத்திற்கும் மேற்பட்டவர் கொடுஞ் சிறைக்குள் தள்ளப்பட்டனரே, இது தியாகமல்லவா?

மொழிக்கு வந்த கேட்டை, மொழிவழிவரும் இனப்படையெடுப்பைத் தடுக்க வரலாறு காணாத எதிர்ப்பைக் காண்பித்தோமே? அதிலே வெற்றியும் கண்டோமே, அது தியாகமல்லவா?

மதுரை, கருஞ்சட்டை மாநாட்டுப்பந்தல், பல்லாயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட பந்தல், பட்டப்பகலிலே, தீக்கிரையாக்கப்பட்டதே, அது என்ன?

பல்லாயிரம் மக்கள், வெய்யிலில், ஆற்றுமணலில் அடித்து, அடித்து விரட்டப்பட்ட கொடுமையைக் கண்டதுண்டா? கேட்டதுண்டா, வேறெங்காவது?

கூடிய அனைவரும் பசியால் பகல் முழுவதும் வாடி, வதங்கி, நடு இரவிலே வெளியேறும் நிர்க்கதியான நிலைமைக்கு ஆளாயினரே!

பெண்களின் மானம் பறிபோனதே; பெண்களின் கருப்புச் சேலைகள் கிழித்தெரியப்பட்டன. இரவிக்கைகள் சின்னபின்னப் படுத்தப்பட்டனவே.

இத்தனையும் தாங்கும், தாங்கின இதயம் படைத்தவர்கள்தானே, நாங்கள், இதெல்லாம் தியாகமல்லாது, வேறென்ன?

தியாகப்பட்டியல் தேவையா?

சேலத்திலே, கழகத் தோழரின் கண்ணை, காட்சிப்புலனரியும் பொறியைப் பறித்தனரே, கோரம், அதைக்கண்டு கலங்கினேமா?

அதே சேலத்தில், கை கால் வெட்டப்பட்டு மூட மாக்கப்படவில்லையா, கழகத் தோழர்கள்:

இது மட்டுமா? எத்தனையெத்தனை 144. எத்த யெத்தனை தடியடி தர்பாரைக் கண்டோம்.

கடந்த இந்தி எதிர்ப்புப் போரிலே, கும்ப கோணத்திலே, குருதிவெள்ளம் ஓடியதே, தெரு வெல்லாம்; ஆளவந்தாரின் அடக்கு முறை அடிதடி யால்?

அந்தப்போரிலே, சென்னையில் தொண்டர்கள், போலீஸ் லாரிகளில் ஆடுமாடுகள் போல் அடைக்கப் பட்டு, நடுக்காட்டில், மிருகங்களைப்போல், தனித்தனி யாக, வேறு வேறுகப் பிரிக்கப்பட்டு, தன்னந்தனி யாக விடப்பட்ட கொடுமைக்கும், ஓர் எல்லை தான் உண்டா?

ஒரு பூரண கர்ப்பவதியையும் அன்றே, நடுக் காட்டில் கொண்டு விட்டனர், நிர்க்கதியாக, தன் னந்தனியாக.

அதே நேரத்தில் சென்னையில் ஆச்சாரியாருக் குக் கருப்புக்கொடி பிடிக்க, ஏற்பட்ட நிகழ்ச்சிக்கு முன்னால், கழகத்தின் மணிகள் அத்தனைபேரையும், ஒருங்கே, ஒரு சேர, நூறு பேருக்கு மேலாக, ஒரே நாளில் கைது செய்ய வில்லையா, இந்தக்காங்கிரஸ் சர்க்கார்? இதெல்லாம் தியாக மில்லையா?

தியாகப்பட்டியல் தேவையா?

சென்னையில் ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி காட்டினோம்; அன்று மக்களை மாக்களாக மதித்து

முள்வேலிக்குள்ளே தள்ளினப்படியும் ஓட ஓட்டாமல் அடித்து அடித்துப் படுகாயப்படுத்தியது இன்னும் மறையவில்லை.

அதே தினம் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்களை வீதியிலே உருட்டியுருட்டி அடித்துக் காயப்படுத்தியதே, போலிஸ் வெறியாட்டம்; இது என்ன?

அன்றைய அடிதடிதர்பாரிலே நூற்றுக் கணக்கானவர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

பலரின் இரத்தத்தை காங்கிரஸ் அடக்குமுறை தர்பார் ருசிபார்த்தது. மக்களை விரட்டி விரட்டியடித்து இரத்தங் குடித்துக் குடலை நிரப்பிக்கொண்டது. காயமடைந்தோர் அனைவரையும் கண்ட அண்ணை, காயத்தழும்புகளிலிருந்து பெருக்கெடுத்தோடிய இரத்தத் துளிகளைக்கண்டு, விட்ட கண்ணீர்த்துளிகள் கணக்கில.

குதிரைப் படைகள் மிதித்துத் துவைத்தன மக்களை. எனினும் கலங்கிடேமில்லை.

முடிவாகப் பலரைப் பிடித்து சிறையிலடைத்துக் கொடுமைப்படுத்தியது, இந்த அடக்கு முறைக் காங்கிரஸ் சர்க்கார்.

இது மட்டுமா? வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல, ஆச்சாரியார் வந்து அடக்குமுறை ஆர்ப்பாட்டம் நடந்த ஒருசில தினங்களிலே குன்றத்தூரிலே யிலிருந்து குமுறும் செய்தி யொன்று வந்தது.

ஆம்! குன்றத்தூரிலே, குண்டுவீச்சு, துப்பாக்கிக்குண்டுகள் பறந்தன மக்களை நோக்கி.

ஒரு சிறு கணம், தப்பியிருந்தால் தோழர் என். வி. நடராசன், குண்டுக்கு, துப்பாக்கிக்கு இரையாகிச் செத்திருப்பார்?

எட்டு முறை துப்பாக்கிப் பிரயோகம்! எட்டு ரவுண்டுகள் சுட்டனர், மக்களைப் பார்த்து, குன்றத்தூரிலே.

சிலர் இறந்தனர். நடராசன் தப்பினர், குறி தவறியதால்? இது தியாகமல்லவா? செத்தால் தான் தியாகமா?

பேச்சுரிமை பறிக்கப்பட்டது, குன்றத்தூரில்; பேச அனுமதி மறுத்து 144 தடையுத்தரவு. அதைத் தோழர் நடராசன் மீறினர்!

பேச்சை நிறுத்த, கூடியிருந்த பல்லாயிரவரைக் கலைக்கக் கொடுமை! கொடுமை! எட்டு ரவுண்டுகள் சுட்டனர்; தடியடிதர்பார் நடத்தினர்.

இது கண்டு கலங்கினோமா? இல்லை.

குன்றத்தூரில் தடையை மீறிய தோழர்கள் மீது வழக்கும் தொடர்ந்தனர் இதெல்லாம் தியாகமல்லவா? செத்தால்தான் தியாகமா?

சாவின் முனையில் வாயிலில் நின்று போராடும் துணிவு, பண்பு தியாகமில்லையா?

சாவை, அழிவை, அடக்குமுறையை, வலிய, தானே சென்று அணைத்துக்கொண்டு 'தியாகம் பாரீர்' என்று பாடிடவேண்டுமா? அதுதான் தியாகமா?

தியாகப்பட்டியல் தேவையா, இன்னும்?

நாரணமங்கலத்திலே, 144 தடையுத்தரவு! மீறிச் சிறை சென்று, கொடுமைக்கு உள்ளானார்களே, எங்கள் இளைஞர்கள்? ஐந்து மாதம், ஆறு மாதம், பத்து மாதம் என்று சிறையிலே வாடவில்லையா எங்கள் தோழர்கள்?

'காந்தியார் சாந்தியடைய' என்ற நூலை எழுதினர் என்பதற்காக, எங்கள் ஆசைத் தம்பிக்குக் கடுங் காவல் விதிக்கவில்லையா?

அவரது தலையை மொட்டையடித்துச் சிரைக்க வில்லையா, இந்த ஆளவந்தார்கள்?

தண்டனை பெற்றவுடன் அவசர அவசரமாகச் சிரைத்தனர், தலையை! அவமானச்செயல்; அர்த்த மற்ற செயல்! ஆணவச்செயல்.

பாராள வந்த பாரத புத்திரர்கள் பார்பர்ஷாப் வைத்தனரே! செங்கோல் பிடிக்கவேண்டிய கையில், சவரக்கத்தியேந்தி, மொட்டையடித்தனரே!

மானபங்கப் படுத்தினரே, மொட்டையடித்து, சிறையில். இது தியாகமா? அல்லவா? எதுதான் தியாகம்?

இத்தனை கொடுமையையும் அனுபவித்தார் ஆசைத்தம்பி, புத்தகம் எழுதியதற்காக.

ஆனால் அவர் குற்றமற்றவர் என்று இப்போது விடுதலை யெய்யப்பட்டார், உயர் நீதி மன்றத்தாரால்.

குற்றமற்றவர், கொடுமைகள் பலவற்றிற்கு, ஆளானர், ஆளாக்கப்பட்டார். சிறையிலே தள்ளப் பட்டார்; தலையையும், சிங்காரத் தலை மயிரையும் பறித்தனர் ஆணவக்கார சர்க்கார்.

தியாகப்பட்டியல் தேவையா?

தூத்துக்குடித் தோழர் தங்கப்பழம் அவர்கள் சிறைசென்றார், சிறைக்கு அனுப்பப்பட்டார், 'சவுக்கடி' என்ற நூல் எழுதியதற்காக.

அவரை, விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். தனியாக அல்ல, வேறு ஒரு கபரின் கையோடு பிணைத்து, இரும்புச் சங்கிலி கொண்டு கட்டியிழுத்துச் சென்றனர்,

தங்கப்பழத்தோடு, அவரது தங்கக் கையோடு இணைக்கப்பட்டவர் யார்? குஷ்டரோகி! புழுத்து நெளியும் கரங்கள்! குஷ்டரோகி.

கொடுமை! கொடுமை! மிக மிகக் கொடுமை! கோரக்காட்சி!

அழுகி காற்றமெடுக்கும், காட்டிலே தாராளமாக நடமாடக்கூடாத குஷ்டரோகம் பிடித்தவரின் கையோடு, இணைத்து, பிணைத்து, பொருத்தி இழுத்துச் சென்றனர்!

என்ன ஈவிரக்கமற்ற பாதகசெயல்? அகிம்சையின் பேரால் ஆண்டிடும் ஆளவந்தாரின் அக்கிரமச் செயல்?

என்ன கொடுமை! பாதகம், வஞ்சகம்! கோரக் காட்சி!

குஷ்டரோகியோடு இணைத்து ஏழித்திடவா இந்தச் செயல்?

நெஞ்சங் குமுறுகிறதே! நினைத்தும் பார்க்க முடியவில்லையே, இந்தக் கொடுமையை?

இதையெல்லாம் அனுபவிக்கும் நாங்களா 'தியாக'த்தை இரவல் பெறுகிறவர்கள்? 'தியாகத்'தைச் சுமண்டுபவர்கள், அதுவும் கம்யூனிஸ்டுகளின், தியாகத்தை!

இன்னும் தேவையா, தியாகப்பட்டியல்?

'தேனீ' நிகழ்ச்சி, மறக்கமுடியுமா? அங்கு நடந்த நாச காரியங்கள் நாடறிந்த உண்மைகள் தானே!

நெடுஞ்செழியன் தலை நசுங்கி, பொசுங்கியிருக்குமே, நொடி தவறியிருந்தால்?

மண்டை பிளந்தால்தான், அல்லது, மண்டையைக் காட்டி, வேண்டுமென்றே நீட்டிப் பிளந்து கொண்டல்தான் தியாகமா? எது தியாகம். தீர்ப்புக் கூறுங்கள், எது தியாகம்? எது தியாகம்?

தியாகப்பட்டியல் இன்னும் தருகிறேன்; கேளுங்கள்.

தேனீயைத் தொடர்ந்து நாட்டிலே, தேவாரம், கம்பம், கழுதி போன்ற இடங்களிலே நமது தோழர்கள் நாங்கிய, காயத்தழும்புகள் இன்னும் மறையவில்லையே?

ஏன்? எங்கள் அண்ணனைப் பிடித்து ஆறு மாதம் சிறைக்குள்ளே தள்ளவில்லையா? ஆரிய மாயை எழுதியதற்காக?

அண்ணனின் காகிதக்கட்டுகளைப் பரிமுதல் செய்யவில்லையா, இந்தச் சர்க்கார்? எத்தனைப் புத்தகங்களுக்குத் தடை? எவ்வளவு நாடகங்களுக்குத் தடை? தெரியாதா மக்களுக்கு? இதெல்லாம்?

என்னவேண்டும், இன்னும் 'தியாகம்' இல்லையா? இரவல்பெறும் நிலையிலா இருக்கிறோம்? இல்லையே?

பின் ஏன், எங்களைப் பழிக்கவேண்டும்? 'கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை வைத்து முன்னேறுகின்றனர்' என்று, தோழர் ஜீவானந்தம் போன்றவர்கள்? நியாயமா? சரியா? முறைதானா?

எங்கள் அண்ணை சிறைப்பட்டார்; ஆறு மாதம் தண்டனை. ஆனல் அவர் பத்தே நாட்களில் வெளியே வந்தார்.

வெளியேவிடும்படி செய்தோம்; இது எங்கள் தியாகத்தின் பயன், பலன்.

தியாகம் பயன் கருதி, பயன் தரும் வகையில் அமைதல் வேண்டும், அமைக்கப்படவேண்டும்.

தியாகத்தின் பயன் பெரிது ஜீவா, பயன் பெரிது!

பயனுக்காக, இலட்சிய சித்திக்காக, நாம் செய்த தியாகங்கள் பலப்பல, வெறும் பேரத்திற்காக அல்ல; அதுவும் தேர்தல் பேரத்திற்காக இல்லவே இல்லை.

இத்தகைய, இலட்சிய வீரர்களைப் பார்த்து கம் யூனிஸ்டுகள் தியாகக் குரலெடுத்துப் பாடுகிறார்கள்; பரிதாபம்!

நமது இலட்சியத்தை, இன்பத் திராவிடத்தை மறந்து, பாதை தவறி நாம் அவர்களுக்கு ஒத்து ழைப்பு தரமுடியவில்லை.

இதற்காக, நமது இலட்சியமே, தவறு என்பதா? சரியல்ல, உங்கள் பேச்சு! வாதம்!

'கம்யூனிஸ்டு அரசாங்கத்தில் தேசிய இனங்கள் பிரிந்து வாழ, உரிமை தரப்படுகிறது' என்று ஒரு வாதம்.

இந்த வாதப்படி, நம்மை, நம்முடைய இலட் சியத்தை விட்டுவிட்டு, அவர்களுடனேயே ஐக்கிய மாகிவிடவேண்டும் என்ற எண்ணம் ஒலிக்கிறது.

அதாவது, 'திராவிட நாடு' திராவிட தேசிய இனமென்று கருதப்பட்டால், கம்யூனிஸ்டு அரசாங்

கத்தில் பிரிந்து வாழ அனுமதிக்கப்படும். அதுவரை பேசாதீர், அதுபற்றி 'என்பது' தானே இதன் பொருள், அர்த்தம்?

எனவே, பொது உடமை அரசாங்கம் ஏற்படுத்த, கம்யூனிஸ்டு கட்சியோடு சேருங்கள் என்பதுதானே, பொருள்? வேறென்ன?

பொது உடைமை; எங்கள் இருதயகீதம்; எங்களுக்கு வேம்பல்ல, எங்கள் இன்பத் திராவிடமே பொது உடைமைப் பூங்காதான்.

பொது உடைமை நாடு ஏற்பட, அதுவும் குறிப்பாக நமது நாட்டில் உண்டாக்கிடச் செய்யவேண்டிய, அடிப்படை, ஆரம்ப வேலைகளைத்தான் நாம், நமது கழகம், செய்தது, செய்து வருகிறது.

பொது உடைமை பூத்துக் குலுங்கி, காய்த்துக் கனிந்து, கனிரசம் தந்திடச் செய்யும், சூழ்நிலையை, மனப்பண்பை மனப்போக்கை மக்களிடை நாம் உண்டாக்கி வருகிறோம்.

இதற்குக் கம்யூனிஸ்டுகள், கூறுவதுபோல, ரஷ்யாவிலிருந்து பொது உடைமைத் தத்துவத்தைக் கொண்டு, எடுத்தற்கெல்லாம், அதனை அழைத்து வரத் தேவையில்லை, அவசியமுமில்லை.

நமது நாட்டு மக்களின், மனவளம், பழக்கவழக்கம், சமயம், சன்மார்க்கம், மதம், மார்க்கம், கோயில், கும்பாபிஷேகம், ஜாதிபேதம், பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை, பிறவி முதலாளித்துவம், இன்ன பிற எத்தனையெத்தனையோ, பிரச்சினைகளை ஆய்ந்து, அலசி அதற்குரிய சூழ்நிலையை உண்டாக்கி மக்களைப் பக்குவப்படுத்தியாக வேண்டும்!

எடுத்தெதற்கெல்லாம் 'ரஷ்யத் தத்துவமா? அதுவே முடிந்ததா? அது பொருந்துகிறதா, முழுதும் இங்கே? யோசித்துப் பார்க்கவேண்டும், ஆர, அமர, 'ரஷ்யபுரட்சி' ஒன்றுமட்டும் மாடலாக அமைந்தால் போதுமா?

KAMARAJ NEWS MART
36/18 Kalava Chetty St
CHINTADRIPET MADRAS

புரட்சிப் போர்முரசு கொட்டிவிட்டால் மட்டும் முடிந்ததா? மனவளம் பெறவேண்டாமா, மக்கள்?

மதத்திலே, மார்க்கத்துரையிலே அறிவு விளக்கம்பெற்று, 'ஆண்டவன் விட்டவழி' 'வினையை வெல்வோர் யார்' என்ற மந்தபுத்தி மறைய வேண்டாமா?

தன்னம்பிக்கை, தன்னைப்போலப் பிறனும் மனிதன், பிறப்பு ஒன்றே, குலமும் ஒன்றே என்ற கோட்பாடு உண்டாகவேண்டாமா? உண்டாக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் யார்?

நாட்டிலே ஆண்டவன்பேரால் முடங்கிக் கிடக்கும் ஆயிரமாயிரம் செல்வக் களஞ்சியங்களை நாட்டுக்கு நாட்டு மக்களுக்குப் பயன்படுத்திட, மக்கள், மனவளத்தைப் பண்படுத்திஎல்தானே, கடக்கும்; முடியும்? யோசியுங்கள்.

இதைச் செய்பவர் யார்? யார்? என்று கேட்கிறேன்? நாங்கள்தானே? அறிவுத் தெளிவு, பகுத்தறிவுப் பண்புதானே எதற்கும் காரணம் என்ற, பொது உடைமையின், உண்மையான, அடிப்படைப் பண்பைப் பரப்புபவர்கள் யார்?

விதியல்ல, வேதனைக்குக் காரணம்; நாட்டிலே சிலர் செய்திடும் சதிதான் என்று கூறும் துணிவு யாருக்கு உண்டாகியிருக்கிறது, எங்களைத்தவிர?

ஆயிரம் ஜாதி, அதன் நடுவே பொது உடைமை ஜோதி!

உண்டாகுமா? உண்டாக்கத்தான் முடியுமா? உண்டாலல்தான் உருவாகுமா? உருவாக்கத்தான் முடியுமா? மக்கள் மனத்தெளிவு பெறுதவரையில்?

மனிதன் மனிதனாக மதிக்கப்படும் வரை, தாழ்மை, மனிதாபிமானம், தன்னைப்போன்றவன் தான் மற்றவனும், பிறப்பில், உழைப்பில் என்ற

எண்ணம், பகுத்தறிவு தோன்றுவதுதான் பொது உடைமைக்கு அடிப்படை.

வெறும் பொருளாதாரப் போர்மட்டும் காரிய சித்தியளித்துவிடாது. கூலி உயர்வு மட்டும்போதாது. பெற்ற கூலி உயர்வை, வெட்டி விழாக்களிலே திருப்பதி யாத்திரைகளிலே போகாது தடுக்கவேண்டும்; தன்னம்பிக்கை ஏற்படச் செய்யவேண்டும். இதைச் செய்பவர் யார்?

இதைவிட்டு 'ரஷ்யப் புரட்சி' ரஷ்யப் புரட்சி' என்று ரஷ்ய மாடலாக எடுத்த உடனே நடக்குமா? முடியுமா? பலன்தான் தருமா?

இந்நாட்டுச் சூழ்நிலை, சமுதாய, மத, பொருளாதார அடிப்படைமுதலியவற்றை மாற்றியமைத்த பின்புதானே, பொது உடைமைப் பூங்கா தோன்ற முடியும்?

'பஜுகோவிந்தம்' பாடும் நாடு இது, அரசியல் அறிவாளிகள் என்று பெயர் பெற்றவர்களே இதனை வளர்க்கிறார்கள். இந்நிலை மாறவேண்டாமோ? மாற்றப்படவேண்டாமா?

மடாலயங்கள், மதபோதகர்கள், மக்கள் மதியை மதிக்காது நடக்கத்தூண்டும் பழக்கவழக்கங்கள், புராண, இதிகாசங்களிடம் மக்கள் கொண்டுள்ள மூட நம்பிக்கைகள் ஒழிக்கப்படவேண்டாமா?

மக்கள் தங்கள் வாழ்வும் தாழ்வும் தம்மிடந்தான் இருக்கிறது என்பதைச் சரியாக, தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டாமா?

இதற்கெல்லாம் மூட்டுக்கட்டையாக இருப்பவை எவை?

ஏன், மக்கள் வாழ்விழந்தும் வாளாயிருக்கின்றனர். ஏன், மக்கள், சுகமிழந்தும் சும்மாகிடக்கின்றனர். ஏன், மக்கள், பெரும்பாலன மக்கள் வாடி

யும், வதங்கியும், ஒரு சிலர் மட்டும் போக போக்கி யங்களிலே புரண்டுகொண்டு மிருக்கின்றனர். ஏழை எளியவர்க்குத் தானம் வழங்கி, ஆலயங்கள் பல கட்டி, அபிஷேக ஆராதனைகள் செய்து மக்களிடை 'மகாதர்மாஷ்டர், என்ற பட்டம், புகழ்மாலை சூட்டிக் கொள்கின்றனர்?

மதத்துறையிலே, மார்க்கத்துறையிலே, கலைகீழ் மாற்றம், சமூக சமுதாய அமைப்பு முறையிலே முழு மாறுதல் உண்டாக்கப்பட வேண்டும். மக்கள் ஆத் மார்த்தத் துறையிலே அறிவு பெற்று, 'வேதன் விட்டவழி, நாதன் இட்ட கட்டளை' என்று பாரத் தைப்போட்டு வாழ்வுப்பாரத்தைத் தாங்கமுடியாது தாங்கி, ஏங்கித்தவிக்கும் மனப்பண்பு மாறி, மன வளம் பெற்று, தன்னைத் தான் நம்பி, தன் சிந்தனை யில், தன் உழைப்பில், ஊக்கத்தில், திறனில் தன் னம்பிக்கை பெற்று, ஏய்ப்பவனை, ஏய்க்கும் முறையை, ஏமாளித்தனத்தின் பாதுகாப்புச் சக்தி களை, முறைகளை, ஏற்பாடுகளை, எல்லாத் துறைகளி லும் புரிந்து, தெரிந்து கொள்ள வேண்டும், ஏமாறு திருக்க; ஏய்ப்பவன் இல்லாதிருக்க, ஏய்க்கும் பண்பே உண்டாகாது, உண்டாகும், உண்டாக்கும் தத்து வமே, பரம்பரையே, பழக்கமோ வழக்கமோ மறைந் தொழிய, மகிழ்ச்சி பொங்க, திருப்தி வாழ்க்கை நடத்திட, பொது உடைமைப் பூங்கா அமைய அமைத்திட, இத்தனையும் விட்டு, 'தேவகி' சினிமாப் படத்திலே வரும் வைத்தியனைப்போல; எந்த நோய்க் கும், ஒரேமருந்து, 'சுகபேதி அல்வா' தருவதைப் போல, எதற்கெடுத்தாலும் 'ரஷ்யா' மாடலா?

ரஷ்யாவை வாழ்த்துகிறோம்; 'இன்பபுரி' என்பதை ஒப்புக்கொள்கிறோம்; அந்த நிலை உண் டாக, உண்டாக்க உருவான திட்டத்துடன் முழு

அமைப்பு, இடையிலே உருக்குலையாது, அமைத் திடுவதற்கான ஆக்கவேலைகளைச் செய்கிறோம் நாங்கள்

ஒரே இலட்சியத்தையடைய, வேறு மார்க்க மல்ல, நாங்கள் போவது; உண்மைவழி, உள்ளவழியும் அதுதான்.

இப்படிப்பட்ட நாங்கள், கம்யூனிஸ்டுகளுடன் மோதுகிறோமாம்; கம்யூனிஸத்தையே அடிப்படை யாகக் கொண்ட நம்மைப்பார்த்து 'ஜார்மோதினன் வீழ்ந்தான்; ஹிட்லர், முசோலினி எதிர்த்தனர், தவிடுபொடி, நீங்கள் எம்மாத்திரம்' என்று பேசு கின்றனர், இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுக்கட்சியினர்.

மோதவில்லை, நாங்கள்; மோதிக்கொள்வது அவர்கள் தான், என்பதை உணரட்டும் கம்யூனிஸ்டு கள்.

எம்மாத்திரம்? யாருக்கு யார் எம்மாத்திரம்? ஏன் இந்தப் பேச்சு, வம்புச்சண்டை எல்லாம்?

எங்கள் வாழ்வுடன், நாங்கள் விடும் ஒவ்வொரு மூச்சிலும் இரண்டறக் கலந்தது, எங்கள் இலட்சி யம், இன்பத்திராவிடம்!

எங்கள் இலட்சியத்தை வளர்க்க, கட்டிக்காக்க எத்தனையோ மணிகள், மாணிக்கங்கள் மடிந்தன! டாக்டர் நடேசன், நாயர், தியாகராயர், பனகல், பனீர் செல்வம், அழகிரி, உடையார்பாளையம் வேலாயுதம் போன்றோர் மாண்டனர்; மருளவில்லை; மறக்கவுமில்லை, இலட்சியத்தை, நாங்கள்.

எம்மாத்திரம், எதிர்ப்பும், ஏளனங்களும் எங் களுக்கு. எத்தனையோ எதிர்ப்புகள், ஏளனங்கள்,

ஏச்சுப் பேச்சுகளைச் சகித்து வந்திருக்கிறோம், சமாளித்து முன்னேறிக்கொண்டே வருகிறோம்.

புத்தர் தோற்றார்; இராமலிங்கர் தோற்றார்; காயுமானர் தோற்றார், பட்டினத்தாரால் முடிய வில்லை, இராமலிங்களருரும் ஜோதியில் கலந்ததோடு சரி, எவராலும் பகுத்துணரயிலே, மாறுதல், அடிப் படை மாறுதல்களை, உருவாக்க முடியவில்லை; நீங் கள் எம்மாத்திரம்? என்று கொக்கரித்தது ஆரியம்? அலறினேமா? அல்லது அயர்ந்துதான் விட்டோமா?

ஆலவாயப்பனை, ஆலகால விஷமுண்ட வாயனை யும் விடவில்லையே நாங்கள், தசாவதாரனையும், தச ரத ராமனையும் தட்டிக்கேட்கத் தவரவில்லையே நாங்கள், இதுமட்டுமா? வேதம், புராணம், இதிகா சம், பக்திரசப்பாட்டு, தோத்திரம், அந்தாதி, அருள் வாக்கு, எதுவும் எங்கள் பார்வைக்குப் பங்கம் விளைத்திட வில்லையே! பழக்கம், வழக்கம், சாது, சமயம், சன்மார்க்கம், வழிவழிவந்தமுறை, வரப்பிர சாதம் பெற்றதன்மை, மடம், ஆலயம், ஆண்டவன், அவர் பெற்றுள்ள வரலாற்று மகிமை, எதுவும் எங்களை வீழ்த்திடக் காணேமே!

நாத்தழும்பேறி நாத்திகம் பேசினாலும், நாக்கு பட்டதாகக் கேள்விப்பட்டதுண்டா? புராணத்தை புளுகு என்று எழுதினாலும், எங்கள் கரம் புரட்டத் தடுக்காணேமே, இன்னும்! சிவனரின் நெற்றிக் கண் எங்களைச் சுட்டெரிக்கவில்லை; திருமாலின் திருச்சக்கரம் எங்கள் திக்குநோக்கி வரக்காணேம்.

தாய், தந்தை—அண்ணன்—தம்பி, உற்றார்—உறவினர்—ஊரார் அத்தனைபேருக்கும் கசப்பான, மனமாற்றத்தைத்தான் நாம் உண்டாக்குகிறோம்.

இதற்காக நாங்கள் எதையெதையோ இழந் தோம் கட்டிக் காத்த கொள்கையினின்றும் வழு வினேமில்லை. குடும்பத்திலே கொந்தளிப்பு ; மனைவி யின் மருட்சிப் பார்வை ; வறுமையின் கோரத் தாண்டவம் ; ஊராரின் கேலிமொழிகள், சனைதனி களின் சுடுசொற்கள், பழுக்க வழுக்கத்தின் பாய்ச் சல், சமூகக் கட்டுப்பாடு, இவையேதும் எங்களை, பாதை தவறும்படி செய்துவிட முடியவில்லை.

எதையெதையோ இழந்தோம், தன்மானக் கொள்கையை, இன்பத் திராவிடத்தைக் கட்டிக் காக்க ஏன் எங்கள் தந்தை போன்ற பெரியார் இராமசாமியையே கூட இழக்க, ஒதுக்க நாங்கள் தயங்கவில்லையே ? பெரியார் கொள்கை தவறிய தற்காக, அவரை விட்டு விலக வில்லையா, நாங்கள்.

இப்படிப்பட்ட இலட்சிய வீரர்களுடன், அர்த்த மற்ற காரியங்களுக்காக மோத வேண்டாம் ; அது வீண்வேலை ; யாருக்கு யார், யார் எம்மாத்திரம், என்ற பல்லவி, பயனற்ற பேச்சு, என்பதைக் கம்யூனிஸ்டுகள், உணரட்டும் ; உணரட்டும்.

இறுதியாக, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, திராவிடத்தின் குரலை, அவசியத்தை, அதற்கான காரியங்களைச் செய்யும், பண்பு படைத்தோரையே நீங்கள் ஆதரிக்கவேண்டும்.

திராவிட முன்னேற்ற முரசு ஒலிக்கட்டு திக்கெட்டும், திராவிடம் வெல்க ! திராவிடம் வளர் வாழ்க வணக்கம் !

KAMARAJ NEWS MART
36/18 Kalava Chetty St
CHINTADRIPET. MADRAS-2.